விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 17 வியாழக்கிழமை (03.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 258

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தாயகம் எங்கும் மக்கள் போராட்டம்

## மக்கள் குழு மூலம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை மீதான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தமிழர் தாயக மெங்கும் தொடர் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட குழுவொன்று நேற்றைய தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.**

இக்குழுவின் மூலம் மக்கள் போராட்டங்களை வடக்கு, கிழக்கு எங்கும் முன்னெடுத்து ஜெனிவா மனிதவுரிமை கூட்டத் தொடருக்கு முன்னதாக சர்வதேச மட்டத்தில் ஓர் அதிர்வினை ஏற்படுத்துவதென றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் கட்சி பேதமின்றி தமிழர்களின் நீதிக்காக அனை வரையும் இணைந்து கொள்ளு மாறு குழுவின் தலைவர் பேராசிரி யர் வி.பி.சிவநாதன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் அழைப்பின் பேரில் நேற்று மாலை கந்தர்மடம் மணல் தரை லேனில் உள்ள அலுவலகத் தில் பகிரங்க கூட்டமொன்று நடை பெற்றது. இக் கூட்டத்தின் போதே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை வந் திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய அரசியல் விவகாரங் களுக்கான 23ஆம் பக்கம் பார்க்க....


## விசாரணையின் போது சர்வதேச தலையீடு தேவை



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச உதவியுடன் விசாரணை நடததப்பட வேண்டுமென சர்வதேச அழுத்தக் குழுவான இன்டர் நேஷ னல் க்ரைசிஸ் க்ரூப்பின் இலங்கைத் திட்ட இயக்குநர் அலன் கீனன் கூறி யிருக்கிறார். 24ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சியின் 64ஆவது மாநாடு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 64ஆவது வருடாந்த மாநாடு பொல நறுவை, கந்துருவெலையிலுள்ள ராஜரட்ட மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்ற இம்மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி 24ஆம் பக்கம் பார்க்க....

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

இலங்கையின் முக்கியக் கட்சி களில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி முழுமையாக சீரமைக் கப்படுவது அவசியம் என கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத திரிபால சிறிசேன தெரிவித்துளளார்.

அப்படிச் செய்தால் மட்டுமே இனி வரும் தேர்தல்களில் கட்சி வெற்றி பெறும் எனவும் அவர் அக்கட்சியின் 64ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போது கூறினார்.

பொலநறுவையில் இடம்பெற்ற அந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## மோடி – சந்திரிகா டில்லியில் சந்திப்பர்



(சென்னை)

முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க இந்தியப் பிரத மர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

புதுடில்லியில் இன்று வியாழக் கிழமை முதல் எதிர்வரும் சனிக் கிழமை வரை இடம்பெறவுள்ள சர்வ தேச இந்து - 24ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர்கள் நாளை பதவிப் பிரமாணம்?

(கொழும்பு)

புதிய அமைச்சர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை பதவிப் பிரமாணம் செய்து கொள்ள உள்ள னர்.

45 அமைச்சரவை அந்தஸ் துடைய அமைச்சர்கள் பதவிப் பிர மாணம் செய்து கொள்ளவுள்ள னர். இதில் 33 அமைச்சர் பதவி கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங் கப்பட உள்ளதுடன், 12 அமைச்சுப் பதவிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சிக்கு வழங்கப்பட உள்ளது.

எவ்வாறெனினும், பிரதி மற்றும ராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கு வது குறித்து இன்னமும் சரியான முடிவு எடுக்கப்படவில்லை எனவும், தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

தேசிய அரசாங்கம் ஒன்றின் ஊடாக 24ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் - பஸ் விபத்து மல்லாவி மாணவன் மரணம்!

### பரீட்சைக்குச் சென்றபோது சம்பவம்


(யாழ்ப்பாணம்)

உயர்தரப் பரீட்சைக்கு தோற்று வதற்காக மோட்டார் சைக்கி ளில் சென்ற மாணவன் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான தில் உயிரிழந்தார். மல்லாவி, ஒட்டங்குளம் சந்தியில் நேற்று புதன்கிழமை மதியம் 12.10 மணியளவில் இந்த விபத்து இடம பெற்றுள்ளது.

மல்லாவியைச் சேர்ந்த தர்ம லிங்கம் பிரதீப் (வயது 19) என்ற மல்லாவி மகா வித்தியாலய உயர் தர வகுப்பு மாணவனே இவ்வாறு விபத்தில் உயிரிழந்தார்.

நேற்று மதியம் 12.30 மணிக்கு நடைபெறவிருந்த புவியியல் பாடத்துக்குத் தோற்றுவதற்காக சக மாண 24ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இன்று தெரிவாவார்?



(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட் சித் தலைவர் யார் என்பது தொடர் பில் சபாநாயகர் கரு ஜெயசூரிய இன்று வியாழக்கிழமை அறிவிக்க வுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட் சித் தலைவராக நியமிக்கப்படு வதற்கு பெரும் வாய்ப்புகள் உள்ள தாக கூறப்படுகின்றது.

8ஆவது நாடாளு மன்றத்தின் முதல் அமர்வு இடம்பெற்றபோதி லும், எதிர்க்கட் சித் தலைவர் நிய மனம் இடம் பெறவில்லை.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



செல்வி
## தர்மசோதி கனகரத்தினம்

Primary Trained, B.A
தொண்டர் ஆசிரியர் சேவை 27.01.1987 - 31.08.1992
சேவைக்காலம் 01.09.1992 - 01.09.2015 வரை
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்



அகவை ஆறினிலே ஏடெடுத்த பள்ளியிலே
மாசிலா ஆசிரியத் தொழிலாலே
ஆரம்பக் கல்வியில் அகல் விளக்காய்
அதிபர் ஆசிரியருடன் இன்முகங்காட்டி
அன்பால் அரவணைத்த அம்மணியே
அகவை அறுபதைத் தாண்டினாலும்
பல்லாண்டு காலம் சீரோடு வாழ
பாராட்டி வாழ்த்துகின்றோம் நாமெல்லாம்.

எமது பாடசாலையில் நிரந்தர ஆசிரியராக பகுதித் தலைவராக 23 வருடங்கள் சேவையாற்றி 01-09-2015 ல் ஓய்வு பெற்று மணி விழாக் கண்ட எமது சிரேஷ்ட ஆசிரியை செல்வி தர்மசோதி கனகரத்தினம் அவர்களின் சேவையைப் பாராட்டி பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம். (1661)

ஆசிரியர் நலன் புரிச் சங்கம்
யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்.

---

## மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில்
மிருக வைத்திய
தேவைகளுக்கு

தொடர்பு :-
**0779738802**

(1656)

---

# உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தேசியப் பட்டியல் நியமனங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் டியூ குணசேகரவினால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெயரிடப்பட்ட அனைத்து தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பாராளுமன்ற உறுப்புரிமையையும் ரத்து செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தமது பெயரை தேசியப் பட்டியலில் உள்ளடக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் தமது பெயர் மூன்றாவதாக காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட 15 பேர் இந்த மனுவின பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(எ-11)

---

# கண்ணீர் அஞ்சலி




## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

எமது சாரதி பயிற்சி பாடசாலையின் ஊழியர்களான சி.கௌசல்யா, சி.சயந்தன் அவர்களின் அன்புத் தந்தையார் ஆறுமுகம் சிவஞானச்செல்வம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தார் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பகிர்ந்து கொள்ளும் :
அதிபர், ஊழியர்கள்
கிருபா லேணர்ஸ்

(ச-2009)

---







# ஓமந்தை வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் 2015

| | |
|---|---|
| ஆரம்பம் | 03-09-2015, வியாழக்கிழமை<br>கொடியேற்றம் காலை 9.00 மணி |
| தேர்த்திருவிழா | 11-09-2015, வெள்ளிக்கிழமை<br>காலை 10.00 மணி |
| பூர்த்தி | 12-09-2015, சனிக்கிழமை<br>தீர்த்தம் காலை 10.00 மணி |
| 11ம் நாள் | 13-09-2015, ஞாயிற்றுக்கிழமை<br>சடைமுனி வைரவருக்கு காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேகம்<br>மாலை 6.00 மணிக்கு பொங்கல் மடை, தீ மிதிப்பு என்பன நடைபெறும். |

**மஹோற்சவ பிரதம குரு**

வித்வான் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் கலைமாமணி
சாமஸ்ரீ தேசமானிய சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார்
**BA Hons, M.A, J.P**
(ஸ்தாபகர் ஹரிஹரபுத்திர தர்மசாஸ்தா ஆலயம் கோயிற் கடவை)

தொடர் சொற்பொழிவு - விநாயகர் புராணம்-
சிவஸ்ரீ நாகரட்ணகலாதர சிவாச்சாரியார்

உற்சவ காலங்களில் அடியார்கள் பால், இளநீர், பூக்கள், மாலைகள் போன்றவைகளை வழங்கி உரிய நேரத்தில் உற்சவத்தில் பங்கேற்று விநாயகப் பெருமானின் திருவருளை பெறுவீராக! (C-2011)

இவ்வண்ணம்:
ஆலய திருப்பணிச் சபையினர் திருவிழா உபயகாரர்கள் மற்றும்
ஆலய பரம்பரைக்குரு ஆறுமுக கணேசகுருக்கள்

---



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## கூறுவிலை கோருதல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் தேவை கருதி - பின்வருவனவற்றுக்கான கூறுவிலைகள் இத்தால் கோரப்படுகின்றன.

(1) கோவிலின் உள் வீதியில் அம்பாள் எழுந்தருளுவதற்கு ஏற்ற 12 அடி - 14 அடி வரைக்குள்ளான உயரமுடைய, 5 வெளி வேலைப்பாடுகள் அமைந்த தங்கத்தேர் ஒன்று செய்து வழங்குதல்.

(2) சமயகுரவர் (2அடி உயரமான எழுந்தருளி) உள் வீதியில் எழுந்தருளுவதற்கு ஏற்ற பல்லக்கு ஒன்று செய்து வழங்குதல்.

(3) நல்லூர் , கோப்பாய், உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குள் - பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்றதான 20 தொடக்கம் - 25 வரையான பரப்பளவை உடைய காணி கொள்வனவு செய்தல். இதற்கான கூறுவிலையில் காணியின் அமைவிடம், மண்ணின் வகை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(4) கோவிலின் பாவனைக்கு உதவாமல் உள்ள இரும்புப் பொருட்களை விற்பனை செய்தல். கிலோ ஒன்றுக்கான கொள்விலை கோரப்படுகிறது.

(5) கோவிலில் பாவித்த பித்தளைக் குத்துவிளக்குகளை விற்பனை செய்தல். கிலோ ஒன்றுக்கான கொள்விலை கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் 2015-09-16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது - கோவில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியுள் 2015-09-16 ஆம் திகதி பி.ப 4.30 மணி வரை இடப்படலாம்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கூறுவிலை" என்று குறிப்பிடுதல் அவசியமாகும்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோவில்
நயினாதீவு 02-09-2015

ப.க.பரமலிங்கம்
செயலாளர்.

(2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் கோபங்களை சபையில் பிரதிபலிப்போம்

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் முற்போக்கு முன்னணியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு வந்துள்ள ஆறுபேரைக் கொண்ட நாம் எமது மக்களின் மகிழ்ச்சியையும் துன்ப துயரங்களையும் கண்ணீர் சிந்தும் விடயங்களையும் இந்தப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துவதைப் போன்றே எமது மக்களின் கோபங்களையும் சபையில் பிரதிபலிப்போம் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

புதிய பாராளுமன்றத்தின் நேற்று முன்தினம் சம்பிரதாய நிகழ்வின் போது கட்சித் தலைவர்கள் உரைகள் இடம்பெற்றன. இதில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் அதன் தலைவர் என்ற வகையில் உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனோ கணேசன் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

சபாநாயகர் பதவிக்கு மிகவும் தகுதியான ஒருவரே தெரிவாகியுள்ளார். கொழும்பு மாநகர சபை மற்றும் மேல் மாகாண சபை ஆகியவற்றில் நீங்கள் செயற்பட்ட சந்தர்ப்பங்களிலேயே இன்றைய தேசிய அரசாங்கம் எனும் செயற்திட்டத்தை வேறு வடிவில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தீர்கள். கொழும்பு மாநகர சபையில் அறிமுகமான நமது உறவு நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

பல்லின மக்களைக் கொண்டுள்ள இந்நாட்டில் பாராளுமன்றத்துக்குள் அவர்களது கௌரவத்தைப் பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. பல்வேறு போராட்டங்களை நடத்தியே நாம் இந்த இடத்திற்கு வந்துள்ளோம். ஆதலால் இங்கு எமது கருத்துக்களை முன்வைப்பதற்கான உரிமைகள் இருத்தல் வேண்டும். புதிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ள தங்களுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எமது மக்களின் மகிழ்ச்சி திருப்தி துன்பம் துயரம். கண்ணீர் உள்ளிட்ட விடயங்களை இந்த பாராளுமன்றத்தில் முன்வைப்பது போன்று அவர்களின் கோபங்களையும் அதற்கான காரணங்களையும் கூட தமிழ் முற்போக்கு கூட்டணியினராகிய நாம் முன்வைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி அதிகரிக்கப்படும்

### பிரதமர் ரணில் உறுதியளிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் தொகை புதிய பாராளுமன்றத்தில் அதிகரிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

எட்டாவது பாராளுமன்றத்தின் சம்பிரதாய அமர்வில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் உரைகளின் பின்னர் விசேட கூற்று ஒன்றை விடுத்து பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்களித்த மக்கள் தமக்கான சேவை, தேவை குறித்து கடிதங்கள் மூலம் கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

மக்களின் தேவை களைக் கருத்திற்கொண்டு அவர் களது தேவைகளை நிறை வேற்றுவதற்கான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று தெரிவித்தார். (இ-7)

### பேருந்துச்சில்லில் சிக்குண்டு வயோதிபத் தாய் உயிரிழப்பு

கொட்டராமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் பேருந்து சில்லில் சிக்குண்டு பலியாகியுள்ளார்.

அஹமட் தசீம் மல்ஹிரா உம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். நாத்தாண்டிய தங்கொட்டுவ பிரதான வீதியில் கொட்டராமுல்ல சந்தியிலுள்ள பேருந்து நிலையத்தில் பேருந்தில் ஏறுவதற்காக முயற்சித்தபோது வயோதிபப் பெண் தவறி விழுந்து பேருந்து சில்லில் சிக்குண்டு உயிரிழந்ததாக நாத்தாண்டிய பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## கெஹலியவிற்கு எதிரான வழக்கு விசாரணை நவம்பரில் நடைபெறும்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் இரண்டு பேருக்கு எதிரான வழக்கு நவம்பர் 13 ஆம் திகதி விசாரணை செய்யப்படும் என கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிடிய தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது, கெஹலிய ரம்புக்வெல, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் விமல் ரூபசிங்க மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே ஆகியோருக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஏப்ரல் 22 அன்று வழக்குப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

600 ஜி.ஈ. குழாய்கள் வாங்கியதில் ஒன்பது இலட்சத்து 90 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக இவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மற்றும் இரண்டு பேருக்கும், மே 20 திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதம நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அவர்கள் நீதவான் நீதிமன்றத்தின் மூலம் அதே நாளில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

### பிக்கு மாணவன் நீரில் மூழ்கிப்பலி


கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சுற்றுலா சென்ற 30 பௌத்த பீட பிக்கு மாணவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் மாலை பாசிக்குடா கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதலாமாண்டு பிக்கு மாணவனான குருநாகலை சேர்ந்த சந்திரானந்த ஹிமி (வயது 22) என்பவரே இவ்வாறு மரணித்துள்ளார். (இ-7)

## நான் தோற்கவில்லை தோற்கடிக்கப்பட்டேன்

### அதாவுத செனவிரட்ன விளக்கம்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நான் தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுத செனவிரட்ன தெரிவித்துள்ளார்.



சேன எனது பெயரையும் பிரதமர் பதவிக்கு தகுதியானவர் என குறிப்பிட்டிருந்தார்.

கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்ட மகிந்த ஆதரவாளர்கள் என்னைத் தோற்கடித்தனர்.

எனக்கு விருப்பு வாக்கு அளிக்க வேண்டாம் என கூட்டங்களை நடத்தியும், கிராமத்திற்கு கிராமம் சென்று துண்டுப் பிரசுரம் வழங்கியும் பிரசாரம் செய்தனர்.

என்னைத் தோற்கடிப்பதற்கு முடிந்தளவு முயற்சிகளை மேற்கொண்டனர். எனது தலைமைத்துவத்தை கைப்பற்றிக்கொள்ள முயற்சிக்கப்பட்டது.

கடந்த தடவை கேகாலையில் ஒன்பது ஆசனங்களில் ஏழு ஆசனத்தைப் பெற்றுக் கொண்டோம். இந்த தடவை அந்த எண்ணிக்கை நான்காக குறைவடைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி

இதனால் என் மீது குரோதம் கொண்ட மகிந்த தரப்பு தீவிர முயற்சி மேற்கொண்டு என்னைத் தோற்கடித்தது.

இறுதியில் மகிந்தவின் குழு மகிந்தவையும் இல்லாமல் செய்துள்ளது என அதாவுத செனவிரட்ன புலத்கோஹோபிட்டியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

### விமல் வீரவன்ச மன்னிப்புக் கோரிய செய்தியில் உண்மையில்லை

கடந்த 31 ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது விமல் வீரவன்ச, ஜனாதிபதியிடம் மன்னிப்பு கேட்டதாக வெளியாகிய செய்தி தொடர்பில் நேற்று முன்தினம் முன்னணி தலைவர்கள் சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கருத்தக்களை வெளியிட்டுள்ளார்.

தான் அந்த செய்தியை பார்த்து ஆச்சரியப்பட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மன்னிப்பு கேட்கும் சம்பவம் ஒன்று கடந்த 31ஆம் திகதி இடம்பெறவில்லை என கலந்துரையாடலில் கலந்து கொண்ட அனைவருக்கும் தெரியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் விமல் வீரவன்சவுக்கு தனது வருத்தத்தினை வெளியிடுவதாகவும் இது மிகவும் மோசமான ஒரு செயல் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக இரகசிய தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## ஜானக பெரேரா கொலை வழக்கு விசாரணை விசேட நீதிமன்றிற்கு

வட மத்திய மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் இராஜதந்திரியுமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொலை வழக்கு விசாரணை விசேட நீதிமன்றிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 31 பேர் கொல்லப்பட்டனர்.

தற்கொலைத் தாக்குதல் மூலம் கொலைகளை மேற்கொள்ள சூழ்ச்சி செய்தமை என்ற அடிப்படையில் அநுராதபுரம் உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தது.

இந்த வழக்கு விசாரணைகளை அநுராதபுரம் விசேட உயர் நீதிமன்றிற்கு மாற்றி விசாரணை செய்யுமாறு பிரதம நீதியரசர் கே.சிறிபவன் உத்தரவிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பயங்கரவாத சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தும் விசேட நீதிமன்றினால் விசாரணை நடத்தப்பட வுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் மதவாச்சியை வசிப்பிடமாகக் கொண்ட அப்துல் ஹமீட் உமர் அக்தாப் என்பவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12,13 ஆம் திகதிகளில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

பிரதம நீதியரசரின் எழுத்து மூல அறிவிப்பிற்கு அமைய இவ்வாறு வழக்கு விசாரணை விசேட நீதிமன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விதிமுறைகளை மீறுவதாக

## கௌஷல் மீது குற்றச்சாட்டு



இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் தரிந்து கௌஷல் விதிமுறைகளை மீறி பந்து வீசுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் நடந்த இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் கௌஷல், பந்துவீச்சு விதிமுறைகளை மீறி பந்து வீசியதாக நடுவர்கள் புகார் அளித்துள்ளனர்.

இதனால் 14 நாட்களுக்குள் அவரது பந்து வீச்சை சோதனை செய்ய சர்வதேச கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது. இதன் முடிவுகள் வரும் வரை அவர் தொடர்ந்து சர்வதேச போட்டிகளில் பங்கேற்கலாம்.

இந்தியாவுக்கு எதிராக 3 போட்டிகளில் பங்கேற்ற கௌஷால் 13 விக்கெட்டுகளை கைப்பற்றி யுளளார்.

முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஹேரத் ஓய்வுபெற்ற பின்னர் அந்த இடத்தை 22 வயதே யான கௌஷால் நிரப்புவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அவர் பந்துவீச்சு சர்ச்சையில் சிக்கியுள்ளார். (க)

### அவுஸ்திரேலிய – இங்கிலாந்து

## ஒரு நாள் தொடர் இன்று ஆரம்பம்

## ஆஷஸ் தோல்விக்கு பழிதீர்க்குமா ஆஸி




இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடா இன்று ஆரம்பமாகிறது.

இரு அணிகளுக்கும் இடையில நடைபெற்ற முடிந்த பாரம்பரிய டெஸ்ட கிரிக்கெட் தொடரான ஆஷஸ தொடரை இங்கிலாந்து 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன், அதன்பின் நடந்த ஒரேயொரு இருபது - 20 போட்டியிலும் இங்கிலாந்து அணியே வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று தொடங்குகிறது.

ஆஷஸ் தோல்விக்கு ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலியா 'பழிதீர்க்குமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இன்று முதல் போட்டியும், 5ஆம் திகதி2-வது போட்டியும், 8 ஆம் திகதி 3ஆவது போட்டியும், 11 ஆம் திகதி 4ஆவது போட்டியும், 13ஆம் திகதி 5ஆவதும் இறுதியுமான போட்டி நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியா அணி ஸ்மித் தலைமையிலும், இங்கிலாந்து அணி மோர்கன் தலைமையிலும் களம் இறங்குகின்றன.

அவுஸ்திரேலியா அணியில் துடுப்பாட்ட வரிசையில் ஸ்மித், மக்ஸ்வெல், வோர்னர், வோட்சன் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். இவர்களுக்கு பேர்ன்ஸ், மிட்செல் மார்ஷ் ஆகியோர் துணையாக இருப்பார்கள். பந்து வீச்சில் ஸ்ரார்க், பட்டின்சன், கம்மின்ஸ், நேதன் குல்ரர்-நைல் சிறப்பாக செயல்பட வாய்ப்புள்ளது.

இங்கலாந்து அணியில் ஹேல்ஸ், மோர்கன், மொயீன் அலி, ஜோ பட்லர், சகலதுறை வீரா பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் சிறப்பான நிலையில் உள்ளனர். பந்துவீச்சில வூட், பின், வோக்ஸ் ஆகியோர் சிறந்து விளங்க வாய்ப்பு ள்ளது.

ஒருநாள் அணியில் இங்கிலாந்தை விட அவுஸ்திரேலியா அணி சற்று பலத்துடன் காணப்படுகிறது. இருந்தாலும் இங்கிலாந்து சொந்த ஊரில் விளையாடுவதால் சிறப்பாக செயல்பட வாய்ப்புள்ளது. (க)

### சின்கோபீல்ட் செஸ்

## ஆனந்த் 8–வது இடம்



சின்கோபீல்ட் கிண்ண செஸ் தொடரில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் 8ஆவது இடம் பிடித்தார். ஆர்மேனியாவின் ஆரோனியன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

அமெரிக்காவில் சின்கோபீல்ட் கிண்ண செஸ் தொடர் நடந்தது. இதில் இந்தியாவின் ஆனந்த், நோர்வேயின் கார்ல்சன், அமெரிக்காவின் ஹிகாரு நகமுரா உள்ளிட்ட 10 வீரர்கள் விளையாடினர்.


முதல் 8 சுற்றின் முடிவில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் 6 'டிரா', 2 தோல்வி உட்பட 3 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் இருந்தார். ஒன்பதாவது மற்றும் கடைசி சுற்றில் ஆனந்த், 'உலக சம்பியன்' நோர்வே வீரர் கார்ல்சன் மோதினர். இதில் ஆனந்த் வெள்ளை நிற காய்களுடன் விளை யாடினார். பரபரப்பான இப் போட்டி 36ஆவது நகர்த்தலின் போது சமனிலையானது.

ஒன்பது சுற்றுகளின் முடிவில் 3.5 புள்ளி பெற்ற ஆனந்த் 8ஆவது இடம்பிடித்தார்.

ஆர்மேனியாவின் ஆரோனியன் 6 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து சம்பியன் பட்டம் வென்றார். அடுத்த இரண்டு இடங்களை நெதர்லாந்தின் அனிஷ் கிரி, நோர்வேயின் கார்ல்சன் தலா 5 புள்ளிகளுடன் பிடித்தனர். (க)

### வயதானாலும் சிங்கம் சிங்கம்தான்

## நோர்வேயில் சனத் வாணவேடிக்கை



வயதானாலும் சிங்கம் சிங்கம் தான் என்பதை நிரூபித்துள்ளார் இலங்கையின் சனத் ஜெயசூரிய.


நோர்வேயில் நடந்த ஒரு கண்காட்சிப் போட்டியில் இலங்கையின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய கலந்து கொண்டார்

46 வயதாகும் சனத் ஜெயசூரிய கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும், அவ்வப்போது கண்காட்சி போட்டிகளில் விளையாடுவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அந்த வகையில் நோர்வேயில் நடந்த ஒரு போட்டியில் பங்கேற்ற சனத் ஜெயசூரிய தனது பழைய ஷொட்களை அசால்டாக ஆடி ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். சில பந்துகளை சிக்ஸருக்கு அனுப்பியும் வாணவேடிக்கை காட்டியிருந்தார். (க)

### அமெரிக்க ஓபன் டெனிஸ்

## பெடரர், முர்ரே முன்னேற்றம்




கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் 2ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் 6:1, 6:2, 6:2 என்ற கணக்கில் லியானர்டோ மேயரை (ஆர்ஜென்டினா) வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.


3ஆம் நிலை வீரரான அண்டி முர்ரே (இங்கிலாந்து) 7:5, 6:3, 4:6, 6:1 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய வீரர் கைரோஜஸை வீழ்த்தினார். மற்றைய ஆட்டங்களில் வாவ்ரங்கா (சுவிட்சர்லாந்து), ஜோன இஸ்னர் (அமெரிக்கா), தோமஸ் பெர்டிச் (செக் குடியரசு) ஆகியோர் வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஷிமோனா ஹெலப் (ருமேனியா) முதல் சுற்றில் மரினாவை (நியூசிலாந்து) எதிர்கொண்டார். இதில் ஹெலப் 6:2, 3:0 என்ற கணக்கில் இருந்தபோது மரினா காயத்தால் விலகினார். இதனால் ஹெலப் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

4ஆம் நிலை வீராங்கனையான வோஸ்னியாக்கி (டென்மார்க்) 6:2, 6:0 என்ற கணக்கில் ஜேமிலோயிப்பை (அமெரிக்கா) வீழ்த்தினார்.

மற்றைய ஆட்டங்களில் குவிட்டோவா (செக் குடியரசு) அசரென்கா (பெலாரஸ்), கெர்பர் (ஜேர்மனி) ஆகியோர் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

செக் குடியரசுவை சேர்ந்த 6ஆம் நிலை வீராங்கனை ஷபரோவா அதிர்ச்சிகரமான தோற்றார். பிரெஞ் ஓபனில் 2ஆவது இடத்தை பிடித்த அவர் 4:6, 1:6 என்ற கணக்கில் லெசினாவிடம் (உக்ரைன்) தோற்றார். (க)




### ஆஸியில் வாடகைக் கார் ஓட்டும்

## பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்



பாகிஸ்தான் அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் அர்ஷத் கான், தற்போது வாடகை கார் ஓட்டும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளரான அர்ஷத் கான் கடந்த 1997ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியில் அறிமுகமானார்.

இவர் 2006இல் பெஷாவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விக்கெட்டை கைப்பற்றி புகழ்பெற்றவர்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில், 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தியது இவரது அதிகபட்ச சாதனை ஆகும்.

கபில்தேவ் நடத்திய சி.சி.எல். அமைப்பில் சேர்ந்து விளையாடிய பின்னர் அர்ஷத் பாகிஸ்தான் அணியிலிருந்து ஓரங்கப்பட்டார்.

இதன் பின்னர் அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரில் குடிபெயர்ந்த அர்ஷத், அங்கு உபேர டாக்சி நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து தற்போது டாக்சி ஓட்டி வருகிறார்.

இவர் பாகிஸ்தான் அணிக்காக 9 டெஸ்ட் போட்டிகளில் 32 விக்கெட்டுகளையும், 58 ஒருநாள் போட்டிகளில் 56 விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குமக்களின் அவசியமான தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியது எமது கடமையே!

## யாழ்.இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண மக்களுக்கு அவசியமான தேவைகளை அந்த நேரத்திலும் பூர்த்தி செய்ய வேண்டியது எமது கடமை என யாழ். இந்திய துணைத்துதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.**

இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யோகா மற்றும் கதக் நடன வகுப்புக்கள் ஆரம்ப நிகழ்வு நேறறு முன்தினம் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கு மாகாணத்தில் போருக்கு பின்னரான காலப்பகுதியில் 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியத் துணைத் தூதரகம் ஆரம்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து எமது தூதரகத்தின் மூலம் வடமாகாண மக்கள் பல வளர்ச்சிகளை அடையவேண்டும் எனும் நோக்குடன் கடந்த 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கலை, கலாசார சபையை உருவாக்கினோம்.இந்திய வெளியிறவுத்துறை அமைச்சின் கீழுள்ள இந்த இந்தியாவின் கலாசார சபையானது மிகவும் முக்கியமான தொன்றாக காணப்படுகின்றது.

இது இந்தியாவின் கலை கலாசாரங்களை அயல்நாடுகளில் மேம்படுத்துவதும் அயல்நாடுகளின் உறவை வலுப்படுத்துவதே முக்கிய நோக்கமாக கொண்டு செயற்படுகின்றது.

எனவே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் நிதியுதவியுடன் இலங்கை இந்திய உறவை வலுப்படுத்தவும் தமிழ்நாடு, வடகிழக்கு உறவை வலுப்படுத்துவதற்கும் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் கலை தொடர்பான கல்வி நிறுவனங்கள் பல காணப்படுகின்றன.எனவே வித்தியாசமான கலைக் கல்வியை அறிமுகப்படுத்தும் நோக்குடன் புதிய கலையான கதக் நடனத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

எமது இந்தியத் துணைத் தூதரகத்தில் பல்வேறு கலை வகுப்புக்கள் இதுவரை காலமும் நடைபெற்று வந்த போதிலும் முக்கிய சில காரணங்களால்அந்த வகுப்புக்களை தொடர்ச்சியாக நடத்த முடியவில்லை.எனவே இந்த செப்டெம்பர் மாதத்திலிருந்து யோகா மற்றும் கதக் நடனக்கலையை தொடர்ச்சியாக நடத்தவிருக்கின்றோம்.இதில் வயதெல்லை இன்றி அனைவரும் கற்றுக்கொள்ள முடியும். இக்கலையை அனைத்து மாணவர்களுமம பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

அத்துடன் இந்தியாவிற்கு சென்று உயர் கலைக்கல்வியை கற்றவர்கள் பலர் வட மாகாணத்தில் உள்ளார்கள்.அவர்களுக்குரிய மரியாதையை நாம் எப்பொழுதும் செய்யவேண்டும். என்பது எமது குறிக்கோள். எனவே அவர்களுடனான தொடர்ச்சியான உறவை பேணுவதற்காக வருடாவருடம் 2 கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். தொடர்ச்சியாக பல்வேறு புதிய கலைகளை அறிமுகப்படுத்தி தமிழ்நாடு மற்றும் வடகிழக்கு உறவை மென்மேலும் வளர்ப்பதற்குஆர்வமாக உள்ளோம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

**டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி**

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.

✷ **பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.**

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P 077 5925088, 021 222 8680**

## யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் புரட்டாதித் திங்கள் பொற்றூறல்

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற 'பொற்றூறல்' நிகழ்ச்சித்தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு 'புரட்டாதித் திங்கள் பொற்றூறல்' என்னும் பெயரில் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 ணிக்கு, இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவரும் யாழ்ப்பாணம் 'சாந்திகம்' நிறுவனத்தின் இயக்குநருமான ஜெகநாதன் தற்பரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக சங்கமம் வயலின் வாத்தியக் கலையக மாணவர்கள் வழங்கும் நாதசங்கமமும், ஜேர்மனி உலக இசைக் கல்லூரியின் தெற்காசிய இசைப்பிரிவுப் பொறுப்பாளர் பாடகர் மாணிக்கம் யோகேஸ்வரனின் புல்லாங்குழல் இசை நிகழ்வும், பொன்சக்தி கலாகேந்திரா கலைக்கழகம் வழங்கும் நாட்டியாஞ்சலி ஆகியனவும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.(இ-7)

## ஈர விழிகளுடன் ஆண்டு நான்கு

அமரர்
**அமிர்தலிங்கம் நந்தகுமாரி**

திதி: ஆவணி மாத அபரபக்க புஞ்சமி
(03.09.2015 ஆம் திகதி வியாழக்கிழமை)

ஆண்டு நான்கானாலென்ன
வருடங்கள் பலபத்தா யானாலென்ன
நீக்கமற நின்றவும் நினைவு
நீங்கிடுமா யெமை நின்றே?
கண்ணெதிரே நின்ற மேனி
கனதூர மேகினாலு மெம்
மனதுக்குள் வாழ்ந்திருப்பீர்...
எம் நினைவில் சேர்ந்திருப்பீர்!



மலர்வு: 19.06.1963
உதிர்வு: 18.08.2011

**உங்கள் நினைவுகளுடன்: கணவரும் உறவினர்களும்**

## ராசி பலன்

03.09.2015
(ஆவணி 17, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 1.36 மணிவரை
அச்சுவினி முற்பகல் 9.02 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம்<br>சமநோக்கு நாள் | | செவ் சுக் |
| | | | குரு சூரி |
| | | சனி | புதன் ராகு |

**மேடம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள.

**சிம்மம்:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், கொடுக்கல்-வாங்கல்களில் உருவான மனஸ்தாபம் அகலும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், களஸ்திர வழியில் நன்மைகள் உண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பணவரவு திருப்தி தரும் நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் தேவையை பூர்த்தி செய்வர், ஆரோக்கியத்தில் முன்னேற்ற முண்டு, விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும்.

**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையும் தைரியம் அதிகரிக்கும் நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்ட முன்வருவர், பொன்னான நாள்.

**மீனம்:** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 1-14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு காசநோய்

## அதிகரித்து வருகிறது என மாவட்ட கட்டுப்பாட்டு அதிகாரி அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் காசநோயின் தாக்கம் குறைவடைந்து காணப்படுகின்ற அதேவேளை ஒன்று தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடத்தில் காசநோயின் தாக்கம் அதிகரித்து வருவதாக மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி ஆர். மாணிக்கவாசகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் காசநோயின் தாக்கம் குறைவடைந்து செல்வதனை அவதானிக்க முடிகிறது.

அந்தவகையில் கடந்த 2010 ஆம் ஆண்டு 420 பேரும் 2011 ஆம் ஆண்டு 351 பேரும் 2012 ஆம் ஆண்டு 319 பேரும் 2013 ஆம் ஆண்டு 266 பேரும் 2014 ஆம் ஆண்டு 256 பேரும் 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 192 பேரும் காசநோயின் தாக்கம் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளனர்.

இதில் 2015 ஆம் ஆண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் காசநோய் தாக்கம் கண்டறியப்பட்டவர்களில் சளிப்படலத்தின்மூலம் காசநோய் உறுதிப்படுத்தப்பட்டு 83 பேரும் சளிப்படலத்தின் மூலம் காசநோய் உறுதிப்படுத்தப்படாமல் 46 பேரும் நுரையீரல் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தாக்கம் ஏற்பட்டு 63 பேரும் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஆனால் கடந்த காலங்களை விட தற்போது சிறுவர்களிடத்தில் (1-14 வயதுவரை) காசநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் கடந்த 2011 ஆம் ஆண்டு 10 பேரும் 2012 ஆம் ஆண்டு 14 பேரும் 2013 ஆம் ஆண்டு 6 பேரும் 2014 ஆம் ஆண்டு 4 பேரும் 2015 ஆம் ஆண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் 12 பேரும் காசநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். இவர்களில் கூடுதலாக நிணநீர் முடிச்சுக்களில் காசநோய் தாக்கம் ஏற்பட்டவர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.

அத்துடன் கடந்த காலங்களில் 2 மாதங்களுக்கு மேல் காசநோய் சிகிச்சை பெறாமல் இருந்தவர்களின் எண்ணிக்கை தற்பொழுது முற்றாகக் குறைந்துள்ளது. அந்த வகையில் 2010 ஆம் ஆண்டு 9 பேரும் 2011 ஆம் ஆண்டு 11பேரும் 2012 ஆம் ஆண்டு 17 பேரும் 2013 ஆம் ஆண்டு 17 பேரும் 2014 ஆம் ஆண்டு 4 பேரும் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். 2015 ஆம் ஆண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் சிகிச்சை பெறாமல் இருந்தவர்கள் முற்றுமுழுதாக குறைக்கப்பட்டுள்ளனர்.

கடுமையான நடவடிக்கை காரணமாக சிகிச்சை பெறாமல் இருப்பவர்கள் தொகை முற்றாக இல்லாது போயுள்ளது. காசநோயின் தாக்கம் உள்ள ஒருவருக்கு வேறு நோய்த்தாக்கம் அதிகளவில் ஏற்படும் போது இறப்பு நேரிடுகின்றது. அந்தவகையில் 2010 ஆம் ஆண்டு 15 பேரும் 2011 ஆம் ஆண்டு 12 பேரும் 2012 ஆம் ஆண்டு21பேரும்2013ஆம் ஆண்டு 21 பேரும் 2014 ஆம் ஆண்டு 29 பேரும் 2015 ஆம் ஆண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 12 பேரும் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய் பிரதேசங்களில் காசநோய்த்தாக்கம் கண்டறியப்பட்டவர்கள் அதிகமாக இருப்பதோடு கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை, நல்லூர், சங்கானை, தெல்லிப் பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களில் இந்த நோய்த்தாக்கம் இருப்பதாககண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலை, அலுவலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுவாக பலர் ஒன்று கூடும் இடங்களில் காசநோய்த்தாக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

எனவே அவ்வாறான இடங்களில் காசநோய்த்தாக்கத்திற்கு உள்ளானதாக கண்டறியப்பட்ட ஒருவர் குறைந்தது 2 கிழமைகளுக்கு வைத்தியசாலையில் தங்கிநின்று சிகிச்சை பெறுவது நல்லது. அத்துடன் தொடர்ச்சியான முறையில் சிகிச்சை பெற்றுவருவதன் மூலம் நோய்த்தொற்று வேகத்தைக் குறைத்தும் காசநோயை யாழ். மாவட்ட தில் முற்றுமுழுதாக இல்லாமலும் செய்யவும் முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)






யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யோகா மற்றும் கதக் (வட இந்திய நாட்டியக் கலை) வகுப்புக்கள் ஆரம்பமாகும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,நடனக் கலைஞர்கள்,இசைக்கலைஞர்கள்,பாடசாலை ஆசிரியர்கள்,யோகா மற்றும் கதக் பயிலும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# வழக்கு தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் விளம்பரம் தொடர்பான வழக்கு யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 26.06.2015 ஆம் திகதி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரிய விளம்பரம் 27.07.2015 அன்று சனிக்கிழமை பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

குறித்த விளம்பரம் தொடர்பாக 09.07.2015 ஆம் திகதி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நாகராசா மகேந்திரராஜாவால் வலயக் கல்விப்பணிப்பாளர் உட்பட 6 பேருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

எதிர் மனுதாரர் சார்பாக ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி குறித்த அறிவித்தலை ீக்கவாங்குவதாக குறிப்பிட்டார்.

அதனை தொடர்ந்து குறித்த விளம்பரத்தை கைவாங்கினால் இவ் வழக்கை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையெனக் குறிப்பிட்டு வழக்கை மீளப் பெறுவதற்கு மனுதாரர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அனுமதி கோரினார்.

இருதரப்பு சட்டத்தரணிகளின் கோரிக்கைகள் மன்றினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பு வழக்கு கைவாங்குவதற்கு அனுமதி வழங்கி குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (இ-9)

# போதைப்பாவனைக்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் றோட்டறக் கழகம், ஹெல்த் தி லங்கா நிறுவனம் மற்றும் யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பிரிவு என்பன இணைந்து நடத்தும் வினாக்குறியும்(?) முற்றுப்புள்ளியும் (.) என்னும் தலைப்பில் போதைப்பொருள் மற்றும் மது சாரத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கையினை பத்து நாட்கள் முன்னெடுக்கவுள்ளன.

இவ்விழிப்புணர்வு நடவடிக்கையானது இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 12ஆம் திகதி சனிக்கிழமை வரை பிற்பகல் 3மணி தொடக்கம் இரவு 8மணிவரை நல்லூர் சுகாதாரப் பணிமனையில் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இதன்போது சிறப்பு விழிப்புணர்வுக் கண்காட்சி, நாடக ஆற்றுகை, தனிமனித ஆற்றுகைகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்பில் போட்டிகள் நடத்தப்பட்டு சிறப்பு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த நிகழ்வுக்கான நிதி அனுசரணையினை யாழ்ப்பாண றோட்டறக்கழகமும் ஹெல்த் தி லங்கா நிறுவனமும் வழங்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கலாசார பேரவையில் இணைய விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை ஊடாக பிரதேசசெயலகங்கள் ஊடாக கோரப்பட்டிருந்த ஆற்றுகைப் போட்டிகளுக்கான விண்ணப்பத்திகதி எதிர் வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே விண்ணப்பங்களை பூர்த்தி செய்யவேண்டிய கலைமன்றங்கள், குழுக்கள் என்பன தத்தமது பிரதேச செயலகங்களில் விண்ணப்ப படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




நல்லைக்குமரன் மலர் 23 ஆவது வெளியீட்டு விழாவும் பேராசிரியர் க.தேவராசாவிற்கு யாழ். விருது வழங்கல் வைபவமும் நேற்றுக் காலை நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் சைவசமய விவகாரக்குழுவின் தலைவருமான் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவினால் வழங்கப்படும் யாழ்.விருதினை பேராசிரியர் தேவராசாவிற்கு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் வழங்கியிருந்தார். நல்லைக்குமரன் மலரின் 23வது மலரை அதன் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியிட்டு வைக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக் கொண்டனர். பின்பு நல்லூர்க் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகர சபையினால் நடத் தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களிற்கு பரிசளிப்பும் யாழ்.விருதினை பெற்றுக்கொண்ட பேராசிரியருக்கு கௌரவிப்புக்களும் நடைபெற்றன. (படங்கள்:-உ.சாளின்)

## சரண குணவர்த்தனவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவை தொடர்ந்தும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்ப்ஹா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளரொருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டிலேயே இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எம்.பிக்களுக்கு ரணில் அறிவுரை

(கொழும்பு)


நாடாளுமன்ற உறுப்பினர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுரை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றம் செல்லும் உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் தொடர்பில் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இறுதி சடங்கில் கலந்துகொள்ள வேண்டும், திருமண வீடுகளில் கையொப்பமிட வேண்டும் எனக் காரணம் கூறி அரசாங்க வேலைகளிலிருந்து தப்பிச் செல்வோர் உள்ளனர். அவ்வாறானவர்கள் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்ளக்கூடாது.

அதேபோல் சபையில் 8 மணி நேரம் இருக்க முடியாதவர்கள் இருந்தால் அவர்களும் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்ளாவிட்டால் தவறாக எண்ணப்போவதில்லை என பிரதமர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வு மற்றும் குழு கூட்டங்களின் போது உறுப்பினர்கள் பொருதத மான ஆடைகளை அணிந்து வர



வேண்டும் என பிரதமர் அறிவுரை வழங்கியுள்ளார்.

யாரும் விரும்பும் அமைச்சு பதவிகளை எதிர்பார்க்க வேண்டாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த அறிவுறுத்தல்கள் பிரதமரினால் விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 NON RC
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4901

பிறப்பு: 1978 RC
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 44
உயரம்: 6'
தகைமை/தொழில்: பொறியியலாளர்/ லண்டன்
தொ.இ: B/4902

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 10 செவ் 12 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: B/4903

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 30
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, AAT/ பிரான்ஸ்
தொ.இ: B/4906

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 20
உயரம்: 150cm
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4904

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 33 செவ் 8 இல்
உயரம்: 156cm
தகைமை/தொழில்: BED/ ஆசிரியர்
தொ.இ: G/4905

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்
தொ.இ: G/4911

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 35 செவ் 2 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/4913

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா களஞ்சியசாலையை உடன் விடுவித்து நெல்மூடைகளை களஞ்சியப்படுத்த உதவவும்

## விசேட அதிரடி படையினருக்கு கடிதம்

(குருமன்காடு)

**வவுனியா, பூங்கா வீதியில் விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நெற் களஞ்சிய சாலையை உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய பணிப்பாளர் லலிதகுமாரி பிரிந்தாஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் சிறுபோக நெல்லினை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலத்தில் குளங்கள் பல புனரமைக்கப்பட்டமையால் இம்முறை சிறுபோக விளைச்சலின் அளவு அதிகரித்துள்ளது.

34 ஆயிரத்து 657 மெற்றிக்தொன் நெல் மூடைகளைக் கொள்வனவு செய்ய வேண்டி வரும் என திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயி ஒருவரிடம் இருந்து 2 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் தற்போது மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பன இணைந்து நெல்லினை களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியசாலைகளை ஒழுங்கமைத்து வருகின்றனர்.

குறிப்பாக வவுனியாவில் ஓமந்தை, வேப்பங்குளம், மாமடு, நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் களஞ்சியசாலைகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் .5 ஆயிரம் மெற்றிக்தொன் வரையிலான நெல்லினையே தற்போது களஞ்சியப்படுத்த முடியும்.

மிகுதி நெல்லினை கள்ஞ்சியப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

வவுனியா, பூங்கா வீதியில் உள்ள நெற் களஞ்சியசாலை விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அது விடுவிக்கப்பட்டால் அங்கு 3ஆயிரம் மெற்றிக்தொன் நெல் மூடைகளை களஞ்சியப்படுத்த முடியும்.

கடந்த வருடம் பெரும்போக உற்பத்தியின் போது அதனை விடுவிக்குமாறு கடிதம் மூலம் கோரியிருந்தோம். ஆனால் பதில் எதுவும் தரப்படவில்லை.

தற்போது அக்களஞ்சியசாலையையும் அங்குள்ள எமது அலுவலகத்தையும் விடுவிக்குமாறு விசேட அதிரடிப்படையினருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2-250)




# சட்டத்தை மதிக்க வேண்டிய பொலிஸார் சட்டத்தை மீறும் வகையில் நடக்கின்றனர்

## வவுனியா நகர சபை ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

(குருமன்காடு)

சட்டத்தை மதிக்க வேண்டிய பொலிஸாரே சட்டத்தை மீறும் வகையில் வவுனியா பொலிஸ் நிலையுத்தை சூழ மதில் கட்டி வருவதை உடன் தடுத்து நிறுத்தவேண்டும் என வவுனியா நகரசபையின் ஆலோசனைக்குழுவில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, நகரசபையின் ஆலோசனைக்குழுக் கூட்டம் வவுனியா நகரசபை அலுவலகத்தில் செயலாளர் க.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா பொலிஸ் நிலையத்தின் பின் பகுதியில் தற்போது மதில் கட்டப்பட்டு வருகின்றது. இப்பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய பகுதியாகவும் குறிப்பாக வீதிக்கான இடமாகவுள்ளது.

அத்துடன் இம் மதிலை கட்டுவதற்கு நகரசபையிலும் அனுமதி பெறப்படவில்லை இது தொடர்பாக வவுனியா நகரசபையின் செயலாளர் என்ற வகையில் தன்னால் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கடந்த 27.02.2015 அன்று இச் செயற்பாட்டை நிறுத்துமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

எனினும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மதில் கட்டப்பட்டு வருகின்றது என நக்ரசபை செயலாளரினால் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, ஆலோசனைக் குழுவில் பங்கேற்றிருந்த ஆலோசகர்கள் இம் மதிலானது வீதிப்போக்குவரத்துக்கு ஆபத்தானதாக அமையும் என்பதால் உடனடியாக இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு தெரிவிக்கப்படவேண்டும். அத்துடன் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இதே வேளை, வவுனியா பொலிஸ் நிலை யத்தில் இருந்து அதிகளவான கழிவு நீர் வெளியேறி பஜார் வீதி கால்வாயில் விடப் படுவதாகவும் இதன் காரணமாக துர்நாற்றம் வீசுவதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

வீடுகளில் இருந்து நீர் வெளியேறும் பட்சத்தில் வீட்டார் மீது வழக்குத்தாக்கல் செய்யும் பொலிஸார் தமது நிலையத்தில் இருந்து நீர் வெளியேறுவதை அவதானிக்காமை ஏன்எனவும்இது தொடர்பிலும் நகர சபை கவனமெடுக்க வேணடும் என்றும் தெரிவித்திருந்தனர். (2-250)

## ஆறு சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் வீதி ஒழுங்கு வீதிகளை மீறியும் உரிய ஆவணங்கள் இன்றியும் வாகனம் செலுத்திய ஆறு சாரதிகளுக்கு எதிராக 7500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி ஏ-9 வீதியில் வரிப்பத்திர மின்றியும் கவனயீனமான முறையிலும் இடையூறு விளைவிக்கும் வகையிலும் வாகனம் செலுத்திய நான்கு சாரதிகளுக்கெதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீத்வான் நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்தியதையடுத்து தலா ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முச்சக்கரவண்டியில் மேலதிக பயணிகளை ஏற்றிய சாரதிகளுக்கு எதிராக 500 ரூபா தண்டப்பணமும் பின்பக்க ஒளியின்றி வாகனம் செலுத்தியவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணமும் என மேற்படி ஆறு சாரதிகளுக்கு எதிராக 7500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2



கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாக விவசாயிகளிடம் உள்ள நெல் மூடைகள் நிர்ணய விலையில் கொள்வனவு செய்யப்படுவதை படத்தில் காணலாம்.

# வீதிக்கு குறுக்கே பாறி வீழ்ந்தது வேப்பமரம்

(முக்கொம்பன்)

வீதிக்கு குறுக்காக வேப்பமரம் ஒன்று பாறி வீழ்ந்ததில் அதனூடான போக்குவரத்து தடைப்பட்டது.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் விவேகானந்தா நகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள விவேகானந்தா நகர் மத்திய வீதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் நேற்று காற்றுடன் கூடிய மழை பெய்தது.

இதன்போது மேற்படி வீதியில் நின்ற வேப்ப மரம் வீதிக்குக் குறுக்காக பாறி வீழ்ந்தது. இதனால் பல கிராமங்களில் போக்குவரத்து தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-283)



# வீதி புனரமைப்புப் பணிக்காக இடிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்களை அமைத்து தாருங்கள்

## பொதுமக்கள்,பயணிகள் கோரிக்கை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதி புனரமைப்பின்போது இடிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்களை மீள அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

இது தொடாபில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு-மாங்குளம் பிரதானவீதி புனரமைப்பு வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் ஆரம்பிக்கப்பட்ட வேளை முள்ளியவளை பிரதேசசபைக்கு அண்மையாக அமைக்கப்பட்டிருந்த இரண்டு பேருந்து தரிப்பிடங்கள் முற்றாக இடித்துத் தள்ளப்பட்டன.

இந்த இரு பேருந்து தரிப்பிடங்களும் பல மில்லியன் ரூபா செலவில் மறைந்த குடும்ப உறுப்பினர்களின் நினைவாக குடும்பத்தினரால் அமைத்து வழங்கப்பட்டது.

குறித்த வீதி அகலமாக்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று பலவருடங்கள் கடந்த நிலையிலும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் அவ்விடத்தில் இடிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்கள் நிர்மாணிக்கப்படாமையால் பேருந்துகளுக்கு காத்து நிற்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இவ்விடத்திற்கு அண்மையாகவே இலங்கை வங்கிக் கிளை,கொமர்ஷல் வங்கிக் கிளை,கமநல அபிவிருத்தித் திணைக்களம் வனவளத் திணைக்களம்,நைற்றா பயிற்சி நிலையம்,சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரதேச சபை என்பன அமைந்துள்ளன. எனவே இவ்வலுவலகங்களிற்கு தமது தேவைகளையும்சேவைகளையும் பெற்றுக்கொள்ள வருபவர்கள் பேருந்து தரிப்பிடங்களில் நின்றே ஏறுவது வழமையாகும் .

இது குறித்து இப்பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,வீதி அகலமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட வேளை வீதியோரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆலயங்களை அகற்றியபொழுது அவர்களினாலேயே அக்கட்டடங்களை வீதியோரத்திற்கு அருகில் புதிதாக மீள நிர்மாணித்து மக்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதேபோல் எமது இடத்தில் இடித்து அழிக்கப்பட்ட இரண்டு பேருந்து தரிப்புக் கட்டடங்களையும் மீள நிர்மாணித்து உதவவேண்டும். அத்துடன் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதுகுறித்து கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் . (2-302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 16 மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜெயா மோடிக்கு கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 16 மீனவர்களை உடனே விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப்பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜெயலலிதா எழுதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழக மீனவர்களை துன்புறுத்தும் இலங்கை கடற்படையின் நடவடிக்கை மீண்டும் தொடர்கிறது. கடந்த ஓகஸ்ட் 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் நாகபட்டினம், கோட்டைப்பட்டினம் மற்றும் மண்டபத்தில் இருந்து 3 படகுகளில் சென்று பாரம்பரியப் பகுதியில் அமைதியாக மீன்பிடித்துக்கொண்டிருந்த 16 மீனவர்களை முதலாம் திகதியன்று இலங்கை கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறைக்கு கொண்டு சென்றுவிட்டனர்.

பல நூற்றாண்டு காலமாக பாரம்பரியமாக தமிழக மீனவர்களுக்கு பாக்குநீரிணை பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தலையிடுகின்றனர். மீனுக்கும் பாரம்பரிய மீனவருக்கும் எல்லை தெரியாது என்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட கருத்து.

சர்வதேச கடல் எல்லை என்பதும், உச்சநீதிமன்றில் விசாரணையில் உள்ளது. 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்தை எதிர்த்து உச்சநீதி மன்றில் தனிப்பட்ட முறையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் தமிழக அரசு தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

பாக்கு நீரிணைப் பகுதியில் தொடர்ந்து கைது செய்யப்படும் அச்சுறுத்தலில் தினமும் இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழக மீனவர்களின பிரச்சினையில் ஒரு நிரந்தர தீர்வைக் காண்பதற்கான செயற்பாட்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழக மீனவர்களின் நலனுக்காக எனது அரசு பல்வேறு திட்டங்களை வகுத்தளித்துள்ளது. ஆழ்கடல் மீன்பிடி படகுக்காக ரூ.30 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை அண்மையில் தொடங்கி வைத்தேன். தமிழக மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடிக்கு ஏற்ற வகையில் தயார்படுத்தும் முன்னோடித் திட்டம் அது.

171 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை கட்டுவதற்காக மாநில அரசு ரூ.51.3 கோடி மானியம் ஒதுக்கியுள்ளது. இதனால் 580 மீனவக் குடும்பங்கள் நேரடியாக பயனடைவார்கள்.

இந்த பிரச்சினையில் ஒரு ஒருங்கிணைந்த தீர்வு காணப்படும் வரை தமிழக மீனவர்களை கைது செய்யவும், அவர்களின் படகுகளை பிடித்துச் செல்லவும் வேண்டாம் என்று இலங்கை கடற்படையினருக்கு அறிவுறுத்தும்படி, இலங்கை அரசிடம் நீங்கள் பேசவேண்டும். பிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்காமல் இருக்கும் இலங்கை அரசின் தற்போதைய நிலைப்பாட்டினால், பல மீனவர்களின் குடும்பங்கள் தங்களின் ஒரே வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.

தமிழகத்தில் இது மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலையை உருவாக்கியுள்ளது. எனவே நீங்கள் இந்த விடயத்தை இலங்கை அரசின் உயர் மட்டத்துக்குக் கொண்டு சென்று, தமிழக மீனவர்கள், அவர்களின் படகுகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை உடனே விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த ஒரு பிரதான பிரச்சினையை உங்கள் அரசு தீர்த்து வைக்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழகத்தில் அதிகமாக இருக்கிறது. எனவே 16 தமிழக மீனவர்களையும், 26மீன்பிடி படகுகளையும்உடனே விடுவிக்கும்படி, இந்த பிரச்சினையை உடனடியாக இலங்கை அரசிடம் கொண்டு செல்வதற்கு மத்திய வெளியுறவுத்துறைக்கு நீங்கள் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சட்டமா அதிபர் ஒரு துரோகி!

## சரத் பொன்சேகா காட்டம்

(கொழும்பு)

**கே.பிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியவில்லை என சட்டமா அதிபர் கோரினால் அவர் நாட்டிற்கு ஒரு துரோகியாகிவிடுவார் என முன்னாள இராணுவ அதிகாரி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

கே.பி யார் என இந்நாட்டில் உள்ள சிறு குழந்தைகளுக்குக்கூட தெரியும். நான் இராணுவ தளபதியாக செயற்பட்ட காலத்தில் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய கே.பி தான் விடுதலை புலிகள் அமைப்பிற்கு வெளிநாடுகளில் இருந்து பணம் சேகரித்து கொடுத்ததோடு தீவிரவாதிகளுக்கு ஆயுதம் பெற்றுக்கொடுத்தார்.

அவர் பெரிய அளவில் அந் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதன் மூலம் எங்கள் நாட்டில் முக்கியஸ்தர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து பிரபாகரன் உயிரிழந்த பின்னர் விடுதலை புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டதும் கே.பி.என தெரியவந்தன.

கே.பி .விடுதலை புலிகளின் சீருடை அணிந்து பிரபாகரனுடன் ஒன்றாக இணைந்து எடுத்து கொண்ட புகைப்படங்கள் அனைத்து இடங்களிலும் உள்ளன.

புலனாய்வு பிரிவின் அறிக்கைகமைய கே.பி.என்பவர் ஆபத்தான பயங்கரவாதியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அப்படி இருக்கும் போது இந்நாட்டு சட்டமா அதிபர் கே.பி.தவறு செய்யவில்லை, அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாதென கூறினால் இச்சட்டமா அதிபர் நாட்டு மக்களுக்காகவோ, நியாயத்திற்காகவோ முன் நிற்பவர் அல்ல.

அவர் தீவிரவாதிகளுக்காக செயற்படுகின்றவர் என எனக்கு தோன்றுகின்றது. இதற்கு முன்னாள் அரசாங்கத்தின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கே.பியை கொஞ்சினார்கள்.ஏன் என்றால் கே.பியிடமிருந்த பணத்தின் மீதும் கப்பல்கள் மீதும் கொண்டிருந்த பேராசையே அதற்கு காரணம்.

அவ் அவசியத்திற்கமையவே தான் இந்த சட்ட்மா அதிபரும் கே.பியை பாதுகாப்பதற்கு முயற்சிக்கின்றார். கே.பி நிரபராதி, கே.பி நாட்டிற்கு ஆபத்தான காரியங்களை மேற்கொள்ளவில்லை என சட்டமா அதிபர் கூறினால் அவர் இந்நாட்டின் துரோகியாக கருதப்படுவார்.

நாட்டின் பாதுகாப்பு இராணுவத்தினருக்கு துரோகியாகிவிடுவார். அவரது தொழிலின் பொறுப்பினை பாதுகாக்கவில்லை.

இவ்வாறான சட்டமா அதிபர் நாட்டு மக்களுக்கு அல்லது நாட்டு சட்டத்திற்கு பாதுகாப்பானவர் என எதிர்பார்க்க முடியாதென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விடைபெற்றார் தயாசிறி ஜயசேகர



வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் மாகாண விவசாய அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு குருநாகலில் அமைந்துள்ள வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வடமேல் மாகாண சபையில் முதலமைச்சராகவும், அமைச்சராகவும அங்கம் வகித்த இவர்கள் இருவரும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானதையடுத்தே இவ்விருவருக்கும் இவ்வாறு பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வடமேல் மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். வடமேல மாகாண சபையின் முதலமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் தயாசிறி ஜயசேகர ஆற்றிய சேவையினை கௌரவிக்கும் வகையில் குருநாகல் நகர சபை உறுப்பினர் ஒருவரினால் அவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் இந்த வைபவத்தின் போது வழங்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 9 இலக்கங்களுக்கு பதிலாக 12 இலக்கங்கள்

2016 ஜனவரி மாதம் முதல் வெளியிடப்படும் தேசிய அடையாள அட்டைகளின் தொடர் இலக்கங்களை பதிவு செய்யும் போது 9 இலக்கங்களுக்கு பதிலாக 12 இலக்கங்களை பதிவு செய்வதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் அடையாள அட்டையின் தொடர் இலக்கங்களின் இறுதியில் பதியப்படும் V குறியீட்டையும் நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் முதல் வெளியிடப்படும் தேசிய அடையாள அட்டையின் பதிவு இலக்கங்களை 12 இலக்கங்களாக்கும் போது, அடையாள அட்டை உரிமையாளரின் பிறந்த வருடத்தை முழுமையாக உட்படுத்தலாம். தற்போது பதிவு இலக்கங்களின் ஆரம்பத்தில் இடப்பட்டிருப்பது அடையாள அட்டை உரிமையாளரின் பிறந்த வருடத்தின் இறுதி இரண்டு இலக்கங்களாகும்.

தற்போது தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொண்டுள்ளவர்கள் பதிவு இலக்கங்களை மாற்றிக் கொள்ள அவசியம் இல்லை என்றாலும் அடையாள அட்டையில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது பழைய இலக்கங்களை வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என்றார்.

1972 ஆம் ஆண்டு தேசிய அடையாள அட்டை வெளியிடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் பதிவு இலக்க எண்ணிக்கை 9 ஆக பதிவு செய்யப்பட்டதுடன் 44 வருடங்களுக்கு பிறகே அதில் மாற்றம் ஏற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருந்துபசாரம் வழங்கிய ஜனாதிபதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருந்துபசாரம் ஒன்றை வழங்கியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் நேற்று முன்தினம் ஜனாதிபதியினால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

எட்டாவது நாடாளுமன்றின் முதல அமர்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி விசேட உரையொன்றினை இதன்போது ஆற்றியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, விசேட இராப்போசன விருந்துபசாரம் ஒன்றை வழங்கியிருந்தார். ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இந்த விசேட விருந்துபசாரம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீரின் உயர்வு!

ஒருசமயம் விஜயநகர பேரரசர், தெனாலிராமன் மற்றும் சில அரசவை உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஓர் அதிகாலையில் ஊர் சுற்றிவரக் கிளம்பினர்.

சென்று கொண்டே காட்டை அடைந்து விட்டனர்.

பேச்சின் திசை பலவாறு மாறிக் கடைசியில், "உலகில் உயர்வானது எது?" என்று திரும்பியது.

சிலர் ரத்தினக் கற்கள்தான் உயர்வானவை என்றனர்.

சிலர் அழகிய மலர்கள்தான் உயர்ந்தவை என்றனர்.

வேறு சிலர் அழகிய வண்ணத்துப்பூச்சிதான் என்றனர்.

அரசருக்கு வண்ணத்துப்பூச்சி என்று சொன்னதும் பிடிக்கவில்லை.

தெனாலியைத் திரும்பிப் பார்த்தார்.

அப்போது தெனாலி, "என்னைக் கேட்டால் உலகிலேயே உயர்ந்த பொருள் தண்ணீர்தான்," என்றார்.

அதைக் கேட்டு அரசர் உள்பட அனைவரும் சிரித்து விட்டனர்.

தெனாலியிடம் பதில் இல்லை.

வெகு நேரம் சுற்றி திரும்பும் போது சூரியன் சூடாகி விட்டது. கொளுத்தியது வெயில்.

அரசருக்குத் தாகம் எடுத்தது.

மற்றவர்களிடம், "அருகில் கொஞ்சம் குடிநீர் கிடைக்குமா என்று பாருங்களேன்...," என்றார்.



தெனாலி ஒருபுறமும், மற்றவர்கள் வேறொரு புறமுமாகத் தண்ணீரைத் தேடிச் சென்றனர்.

வெகு தூரம் வரையில் நதியோ, குளமோ இல்லை.

அரசரின் தாகம் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

அப்போது விசித்திரத் தலைப்பாகை அணிந்த ஒரு கிராமத்தான் தலையில் பெரிய பானையுடன் வந்தான். "அரசர் அவனை அருகில் அழைத்துக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்," என்றார்.

அதற்கு அவன், "அரசே! என் குழந்தைகளுக்கு நல்ல தாகம். தவிக்கின்றனர். அவர்களுக்காக வெகு தூரத்திலிருந்து எடுத்து வருகிறேன்," என்றான்.

அதற்கு அரசர், "இந்தப் பானையைக் கொடுத்து விடு. பதிலுக்கு என்ன வேண்டுமோ கேள்... தருகிறேன்..." என்றார்.

"அப்படியா?" என்ற கிராமத்தான்.

"சரி... எனக்குப் பதிலுக்குப் பாதி நாட்டைத் தாருங்கள்..." என்றான்.

அரசருக்குக் கோபம் வந்துவிட்டது. ஆனால், தாகத்தால் உயிர் போய்க் கொண்டிருக்கவே, "சரி... தண்ணீரைக் கொடு..." என்றார்.

அந்த மனிதன் தண்ணீரை ஊற்றினான். அரசர் குடித்தார். பிறகு தலையை உயர்த்திய போது, தண்ணீர் ஊற்றியவனைக் கண்டு திடுக்கிட்டார்.

எதிரில் தெனாலிராமன் நின்றிருந்தார்.

தண்ணீர் பானையைச் சுமந்து வந்த கிராமத்தான் அவரேதான்!

சிரித்துக் கொண்டே தெனாலிராமன், "என் அதிகப்பிரசங்கித்தனத்துக்கு என்னை மன்னியுங்கள் அரசே! நான் கூறியது சரியாகிவிட்டது பார்த்தீர்களா?" என்றார்.

அதைக் கேட்ட அரசர் சிரித்தவாறு ஆமோதித்தார்.

அப்போது அமைச்சர் முதலானோர் திரும்பி வந்தனர். எல்லாரும் பானையில் இருந்த தண்ணீரைக் குடித்துத் தாகம் தீர்த்தனர்.

தெனாலிராமனுக்குப் பாராட்டுக்கள் குவிந்தன!

## 09.2015 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 301 - உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்றும், உலகின் மிகவும் பழமையான குடியரசுமான சான் மரீனோ புனித மரீனசினால் உருவாக்கப்பட்டது.
- 1189 - முதலாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1260 - பாலஸ்தீனத்தில் மங்கோலியர்களுடன் இடம்பெற்ற போரில் மாம்லுக்குகள் வெற்றி பெற்றனர். இதுவே மங்கோலியப் பேரரசு அடைந்த முதலாவது தோல்வியாகும்.
- 1798 - பெலீசின் கரையில் ஸ்பானியர்களுக்கும் பிரித்தானியருக்கும் இடையில் ஒருவாரப் போர் இடம்பெற்றது.
- 1801 - இலங்கையில் நெல், மற்றும் தானிய வகைகளுக்கு வரி செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1855 - நெப்ராஸ்காவில் அமெரிக்கப் படையினர் சியூ பழங்குடியினரைத் தாக்கி பெண்க்ள் குழந்தைகள் உட்பட 100 பேரைக் கொன்றனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் கென்டக்கி மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1914 - அல்பேனிய இளவரசன் வில்லியம் பலத்த எதிர்ப்பை அடுத்து ஆறுமாத ஆட்சியின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறினான்.
- 1933 - சோவியத் ஒன்றியத்தின் அதி உயர் புள்ளியான பொதுவுடமை முனையை (7495 மீ) யெவ்கேனி அப்லாக்கொவ் எட்டினார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியை முதல் தடவையாக நேச நாடுகள் முற்றுகையிட்டன.
- 1971 - கட்டார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976 - நாசாவின் வைக்கிங் 2 விண்கலம் செவ்வாய்க் கோளில் இறங்கி செவ்வாயின் மிகக் கிட்டவான வண்ணப் படங்களை பூமிக்கு அனுப்பியது.

**பிறப்புகள்**

- 1814 - ஜேம்ஸ் சில்வெஸ்டர், பிரித்தானிய கணிதவியலாளர்
- 1829 - அடோல்ஃப் ஃபிக், ஜேர்மானிய கண்டுபிடிப்பாளர் (இ. 1901)
- 1948 - லெவி முவனவாசா, சாம்பியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் (இ. 2008)
- **1951 - மைத்திரிபால சிறிசேன, இலங்கை அரசியல்வாதி**
- 1976 - விவேக் ஒபரோய், இந்தித் திரைப்பட நடிகர்

**இறப்புகள்**

- 1658 - ஒலிவர் குரொம்வெல், இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர் (பி 1599)
- 1999 - அப்துல் காதர் சாவுல் அமீட், இலங்கை அரசியல்வாதி (பி. 1928)
- 1999 - இர. ந. வீரப்பன், மலேசிய எழுத்தாளர் (பி. 1930)
- 2014 - ஏ. பி. வெங்கடேசுவரன், இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலர் (பி. 1930)

### மைத்திரிபால சிறிசேன



மைத்திரிபால சிறிசேன -Maithripala Sirisena, என்று அழைக்கப்படும் பல்லேவத்தை கமரலாலாகே மைத்திரிபால யாப்பா சிறிசேன செப்ரெம்பர் மாதம் ,3 ,1951 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் இலங்கையின் 6 ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவார்.

1989 இல் அரசியலில் நுழைந்த இவர் இலங்கை சுதந்திரக் கட்சியில் இருந்து 1989 முதல் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.

1994 முதல் 2014 நவம்பர் வரை இலங்கை அமைச்சரவையில், பல முக்கியப் பொறுப்புகளை வகித்து வந்தார். பாதுகாப்புப் பதில் அமைச்சராகவும் இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்துள்ளார்.

2014 நவம்பர் 21 அன்று அக்கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சிக் கூட்டணியில் இணைந்தார். ஜனவரி 8, 2015 அன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக, புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராசபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1951 இல் பொலநறுவையில் விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்த சிறிசேன பொலநறுவை றோயல் கல்லூரியில் கல்வி பயின்றார்.

பின்னர் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயின்று 1973 ஆம் ஆண்டில் பட்டயப் படிப்பை முடித்தார். 1971 ஜேவிபி புரட்சியின் போது இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

1980 இல் இவர் ரஷ்யாவின் மாக்சிம் கோர்க்கி கல்விக்கழகத்தில் அரசியல் அறிவியலில் பட்டயம் பெற்றார்

2015 ஜனவரி 8 இல் நடைபெற்ற தேர்தலில் சிறிசேன 51.28% வாக்குகள் பெற்றார்.

2015 ஜனவரி 9 அன்று இலங்கையின் 6 ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன உச்சநீதிமன்ற நீதியரசர் க.சிறீபவன் முன்னிலையில் பதவியேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. நகரில் சட்டவிரோதமான வர்த்தக நிலையங்கள் அகற்றல்

(குருமன்காடு)


வவுனியா நகர்ப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டன.

வவுனியா நகரில் வர்த்தக நிலையங்கள் பல இயங்கிவரும் நிலையில் சில வர்த்தக நிலையங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு மேலதிகமாக வீதியை இடையூறு செய்யும் வகையிலும் பாதசாரிகள் பயணிக்கும் இடங்களிலும் பொருட்களை வைத்து வியாபாரம் செய்து வருவதுடன் அனுமதி பெறாமலும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையில் நகரசபையினால் அவ் வாறான வர்த்தக நிலையங்களை அகற்று மாறு பல தடவைகள் கோரப்பட்ட போதிலும் எவ்வித செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வில்லை.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் நகரசபையினரால் வீதிக்கு இடையூறு விளைவிக்க கூடிய வகையில் வர்த்தகத்தில் ஈடுபட்ட கடைகள் மற்றும் வீதியோர வியாபாரத்திற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் இல்லாது பாத சாரிகள்




செல்லும் இடதத்தில் வர்த்தகத் தில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் வர்த்தகர்களைசுகாதார பரிசோதகர்களும் நகரசபை சிற்றூழியர்களும் ஈடுபட்டதுடன் வவுனியா பொலிஸார் இச் செயற்பாட்டுக்கு பாதுகாப்பை வழங்கினார்கள்.



இச் செயற்பாட்டின் நோக்கமானது வவுனியா நகர் பகுதியின் போக்குவரத்து நெரிசலினை குறைப்பதற்கும் மக்களின் நடைபாதைகளை விஸ்தரிப்பதற்கும் என நகர சபையினர்தெரிவித்தனர். (2-250-281)


## "செருப்பு" குறும்படம் விரைவில்




(முள்ளியவளை)


முள்ளியவளை நண்பர்கள் கலை வட்டாரத்தின் ஏற்பாட்டில் ஈழத்து கவிஞரான முல்லை வர்மன் எழுதிய " செருப்பு" எனும் குறும்படம முள்ளியவளையில் முதன் முதலாக வெளியாகும் திரைப்படமாகும். இப்படத்தின் காட்சிகளை கே.என். கிரியேஷன் ஹேரூபன் ஒளித்தொகுப்பு செய்து வருகின்றார்.

இப்படம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வெளியிடப்படும் என படப்பிடிப்பு வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றது. (2)




## புதுமுறிப்புக்குளத்துக்கு அண்மையாக பாலங்களின் அருகில் பாரிய குழிகள்

### விபத்து ஏற்படும் அபாயம்- பொதுமக்கள் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி - அக்கராயன் பிரதான வீதியின் புதுமுறிப்பு குளத்துக்கு அண்மித்த பகுதியிலுள்ள இரு பாலங்களின் அருகே ஆபத்தான குழிகள் காணப்படுவதனால் பாரிய விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுகின்றது என பொதுமக்களும் பயணிகளும் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி - புதுமுறிப்பு ஊடாக அக்கராயன் செல்லும் பிரதான வீதியின் புதுமுறிப்புச்சந்திக்கு அண்மித்த பாலத்தின் அருகே பாரிய குழி காணப்படுவதுடன், வீதியும் மிக ஒடுங்கியதாகவே காணப்படுகின்றது.

மிக ஆபத்தான நிலையில் குறித்த பகுதி காணப்படுவதனால், இதன் ஊடாகப்பயணிக்கும் வாகனங்களும் பொதுமக்களும் பெரும் விபத்துக்களை எதிர்கொள்ளும் நிலைகள் காணப்படுகின்றன.

அத்துடன், இதற்கருகிலுள்ள மற்றுமொரு பாலமும் மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

ஆகவே, இந்தப்பகுதி மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் இந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளது.

இவ்வாறான வீதிகளை புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)


## சிறுபோக நெல் மூடைகளின் கொள்வனவு வவுனியாவில் ஆரம்பம்



வவுனியா மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட சிறுபோக நெல் மூடைகள் கொள்வனவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

விவசாயி ஒருவரிடம் இருந்து 2ஆயிரம் கிலோகிராம் வீதம் நெல் மூடைகள் கொள்வனவு செய்யப்படுகிறது. இந்நிலையில் வவுனியாவில் 34ஆயிரத்து 657 மெற்றிக் தொன் நெல் மூடைகளைக் கொள்வனவு செயவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் ஓமந்தை, வேப்பங்குளம், மாமடு, நெடுங்கேணி ஆகிய பிரதேசங்களில் தற்போது 5 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லினை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகங்கள் ஊடாக விவசாய திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (2-250)





தமிழ் அறிஞர் தனிநாயகம் அடிகளாரின சிரார்த்ததினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் வவுனியா நகரமத்தியில் உள்ள அன்னாரின் சிலைக்கருகில் இடம்பெற்ற இந்த நிகழ்வில மலர்மாலை அணிவித்தும் மலர் செலுத்தியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து தனிநாயகம் அடிகளார் பற்றி நிகழ்வின் தலைவர் கலாநிதி அகளங்கனால் சிற்றுரையும் ஆற்றப்பட்டது.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மின்சார இணைப்புக்காக கொண்டுவரப்பட்ட மின்கம்பங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன

### பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின இணைப்பிற்காக கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட மின்கம்பங்கள் உட்பட ஏனைய பொருட்கள் இதுவரை கிடப்பில் போடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் தெரியவருவதாவது. -

பொன்னகர் கிராமத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்புக்காக கடந்த 2011 ஆம் ஆண்டு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்த போதும், கடந்த ஆண்டு குறித்த பகுதிக்கான மின்கம்பங்கள் இறக்கப்பட்டதாகவும் இன்றுவரை அவை அப்படியே உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் விரைவாக மின்சாரத்தை பெற்றுத்தருவதாக விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்ற போதும் இதுவரை தமக்கு மின்சாரம் வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் குப்பி விளக்குகளிலேயே மாணவர்கள் கல்வியைத் தொடரும் அவலநிலை காணப்படுவதுடன் இருட்டில் விஷப்பூச்சிகளுக்கும் அச்சமடைய வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு செல்லவுள்ளார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சில வாரங்களில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என தெரியவந்துள்ளது. பயணத்திற்கான கால அட்டவணை தயாரிக்கும் நடவடிக்கைகள இருநாட்டு அதிகாரிகளினாலும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் முதலாவது விஜயம் மேற்கொண்டதும் இந்தியாவிற்கு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய ஊடக அறிக்கைகளுக்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை அமைச்சரவையை நியமித்ததன் பின்னர் அந்நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளார் என கூறப்படுகின்றது.

ஏற்கனவே மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது நல்லிணக்கம் தொடர்பில் ஏற்பட்டிருந்த தடைகள் தற்போது நீங்கியுள்ளன.

இந்தநிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி முந்திக் கொண்டு வாழ்த்து தெரிவித்ததாக இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# இலங்கை கட்டளைகள் நிறுவனம் தேசத்திற்கு வழங்கும் சேவைகள்

தரம் என்ற சொல்லை நாம் எமது நாளாந்த தினசரி வாழ்க்கையில் அடிக்கடி வழமையாக உபயோகிக்கின்றோம். நீங்கள் ஒரு விற்பனையாளராகவோ அல்லது நுகர்வோராகவோ இருக்கலாம், யாராக இருப்பினும் எப்பொழுதும் பொதுவாக எழுப்பப்படும் ஒரு கேள்வியானது எங்களுக்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் நல்ல தரத்தில் உள் ளன என எவ்வாறு நம்புவது? எங்களில் எத்தனை பேர் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படும் குறியீடுகளில் கவனம் செலுத்தியிருக்கின்றோம்? சாதாரண பிரஜையாக இந்தக் கேள்விகளுக்கு நாம் பதிலளித்தோமானால், நம்மில் பலருக்கு இவற்றைப் பற்றிய அறிவோ, அக்கறையோ போதியளவில் காணப்படுவதில்லை. எமக்கு இவற்றைப் பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமான ஒன்றாகவே இருக்கின்றது.

இலங்கையிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு பொருட்கள் வாங்கும்போது அவற்றில் SLS முத்திரை பொறி கப்பட்டிருப்பது தெரிந்திருக்கும். இந்தக் குறியீடுகள் எம்மிடையே ஓரளவு பிரபல்யமாக இருக்கின்றன. SLS முத்திரை பொறிக்கப்பட்ட பொருட்கள் இலங்கை தரநிர்ணயத்திற்கு அமைவாக உள்ளன என உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி சான்றிதழ்படுத்தும் இந்த முறையானது இலங்கை கட்டளைகள் நிறுவனம் (Sri Lanka Standards Institution) எனப் படும் ஒரு அமைப்பினாலேயே மேற்கொள்ளப்படுகிறது. இந்நிறுவனமானது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் தொழிற்படுவதுடன், சர்வதேச கட்டளைகள் நிறுவனத்தின் (ISO) இலங்கைக்கான பிரதிநிதியாகவும் செயற்படுகின்றது.

Sri Lanka NATIONAL QUALITY AWARD

நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இந்நிறுவனத்தின் பிரதான நோக்காகும். இந்த நிறுவனமானது கடந்த ஐம்பது வருடங்களாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் எல்லா துறைகளினதும் தரப்படுத்தல் மற்றும் தரமுகாமைத்துவத்தின் முன்னேற்றத்தில் பிரதான பங்காற்றுவதுடன், தேசிய தரப்படுதல் நிறுவனமாகத் தொழிற்பட்டு இலங்கையின்கைத் தொழிலிலும், வர்த்தகத்திலும் முன்னணி அமைப்பாகத் திகழ்கின்றது.

இந்நிறுவனமானது 9 தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் தேசிய, சர்வதேச ரீதியில் தரநிர்ணயத் திற்கான பிரதிகள், தொழில்நுட்ப வழிகாட்டிகள் மற்றும் தரமுகாமைத்துவ பத்திரிகைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு தனித்துவமான நூலகத்தையும் உள்ளடக்கிய 12 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த எல்லா பிரிவுகளும் ஒன்றிணைந்து பின்வரும் பிரதான நோக்குகளை நிறைவேற்றுவதற்காகப் பணியாற்றுகின்றன.

தரப்படுத்தல் மற்றும் தரநிர்ணய முகாமைத்துவம் போன்றவற்றிற்கு ஆதரவளித்தல்

உலகளாவிய ரீதியிலும், தேசிய ரீதியிலும் விற்பனை இடைத்தொடர்புகளை வசதிப்படுத்தல்

நிறுவனங்களை அவற்றிற்குப் பொருத்தமான சர்வதேச தரமட்டத்திற்கு இணங்கும் வகையில் உயர்த்துவதற்கு உதவிபுரிதல்

கைத்தொழில்களுக்கு ஆதரவளிக்கும் அபிவிருத்தி சார்ந்த திட்டங்களை முன்னெடுத்தல்

நுகர்வோரின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினைப் பேணுவதுடன், சூழலையும் பாதுகாத்தல்

அத்துடன் இலங்கை கட்டளைகள் நிறுவனம் (இ.க.நி) ஆனது சிறந்த பொறுப்பு தாரர்களின் சேர்க்கையினைக் கொண்டுள்ளது. இப்பொறுப்புதாரர்கள் இ.க.நி இன் வெற்றியினை மெருகூட்டுவதுடன், அவர்களது பாதையில் தோன்றும் அடிமட்டத்திலான பிரச்சினைகளைக் கண்டறியும் வாய்ப்பினையும் நிறுவனத்திற்கு வழங்குகின்றனர்.


வேகமாக வளர்ந்து வரும் இலங்கைப் பொருளாதாரத்தில் சிறந்த தர முகாமைத்துவத்திற்கான தேவையினைப் பூர்த்தி செய்ய இ.க.நி. ஆனது எண் ணற்ற சேவைகளை வழங்குகின்றது. பின்வரும் பிர தான சேவைகளைப் பெற்றுக் கொள்ள இ.க.நி உங்களுக்கு கைகொடுக்கும.

## இ.க.நி.இனால் வழங்கப்படும் சேவைகள் எவை?

### 1. தரக்கட்டளைகளை உருவாக்குதல்

தேசிய, சர்வதேச ரீதியிலான அடிப்படையில் பொருட்கள், சேவைகள், செயன் முறைகள், நடவடிக்கைகள் ஆகியவற்றின் தரத்தை நிர்ணயிப்பதற்கான தரக்கட்டளைகளை உருவாக்குதல்

தற்போது 1400 இற்கும் மேற்பட்ட இலங் கைத் தரக்கட்டளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல தரக் கட்டளைகள் புதிய பொருட்கள், செயன்முறைகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளன.




### 2. பொருட்களுக்கான தரச் சான்றிதழ்களை வழங்குதல

ஒழுங்கான மற்றும் திட்டமிடப்பட்ட சோதனைகள் மூலமும், தரப்பரிசோதனை மூலமும் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தல்

இப்பொருள் அல்லது பண்டமானது இலங்கையில் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு அமைவாக தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்பட்டது என இ.க.நி இனால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் குறியீடு

இம்முறையானது தேர்ச்சி பெற்ற தரப்பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன், இப்பொருட்கள் உற்பத்தி நிலையத்திலிருந்தும், சந்தைகளிலிருந்தும் குறித்த இடைவெளிகளில் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப் பட வகை செய்கின்றது.

### 3. அமைப்பு / முறைமைகளுக்கான தரச் சான்றிதழ்களை வழங்குதல்

நிறுவனங்களுக்கு அவற்றிற்குப் பொருத்தமான ISO தரக் கட்டளைகளின் நியமங்களிற் கேற்ப சான்றிதழ்களை வழங் கு த ல். உதாரணமாக ISO 9001 தரமுகாமைத்துவத்திற்காகவும், ISO 14001 சூழல் முகாமைத்துவத்திற்காகவும், ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்காகவும், வேறு பல தரச்சான்றிதழ்களும் இ.க.நி இனால் வழங்கப்படுகின்றன.

### 4. இறக்குமதிப் பரிசோதனைத் திட்டம

கட்டாய இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தல்.

தற்போது ஏறக்குறைய 120 பொருட்கள் இறக்குமதியின்போது மிக கவனமாக அவதானிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு இலங்கைத் தரக்கட்டளைகளுக்கு ஏற்ப தரம் உறுதிப்படுத்தப்படுவதுடன், இலங்கை சுங்கத் திணைக்களத் திற்கு இது பரிந்துரை செய்யப்படுகி றது. இதன் நோக்க மானது தரம் உறு திப் படுத்தப் படாத பொரு ட் கள் சந்தைக்குள் நுழைவதைத் தடுப்பதன் மூலம் வாடிக்கை யாளரைப் பாதுகாப்பதாகும்.

### 5. பயிற்சிகளை வழங்குதல்

தர முகா மைத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுதலும், கருத்தரங்குகள், பயிற் சிப் பட்டறைகள், பயிற்சி நிகழ்ச் சித் திட்டங்கள், தொலைக்கல்வி என்பவற்றை நடத்துவதன் ஊடாக இலக்கு குழுவினருக்கு அறிவூட் டலும் உயர முகாமைத்துவம், இடை நிலை முகாமைத்துவம், நிர் வாகிகள், மேற்பார்வையாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், கீழ் மட்ட தொழிலாளர் போன்ற எல்லா மட்டத்திலுமான ஆளணியினருக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்தல். இந்த நிகழ்ச்சத்திட்டங்கள் கோரிக்கைகளின் பேரில் பயனாளிகளின் பணியிடங்களில் நடத்தப்படலாம்.

### 6. ஆய்வுகூட பரிசோதனைகள

பொருட்களின் தரத்தை நிர்ணயிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல்

ஆறு பரிசோதனைக் கூடங்கள் வினைத்திறனான, நம்பகமான சேவைகளை பொதுமக்களு க்கும், தனியார் நிறுவனங்களு க்கும் வழங்குவதற்கு தொழிற்படுகின்றன.

### 7. அளவைக்கருவிகளை நியமப்படுத்தல்

சரியான அளவீடு நடைமுறைகளைப் பரப்புவதற்கு நியமப்படுத்தல் மற்றும் அளவீட்டு சேவைகளை வழங்குதல்.

### 8. ஆவணப்படுத்தலும் தகவலும்


தரப்படுத்தல் மற்றும் தரமுகாமைத்துவம் பற்றி கைத்தொழில், வியாபார நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு தகவல் வழங்கல்.

### தேசிய பண்புத்தர விருது

இறுதியாக இ.க.நி ஆனது அமெரிக்காவின் மல்கம் பால்டிரிச் தேசிய தரத்திற்கான விருதின் மதிப்பீட்டு முறையின் நியமங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்து “இலங்கை தேசிய பண்புத்தர விருது” இனை வழங்குகின்றது.

இந்த விருதிற்கான மதிப்பீட்டு முறையானது அந்நிறுவனங்களின் பலம் மற்றும் பலவீன ங்களை அறிந்துகொள்ளவும், முன் னேற்றப்படவேண்டிய நிலைகளை ஒரு முழுமையான ஆய்வின் மூலம் இனங்கண்டு கொள்ளவும், அவர்களின் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகளை அறிந்துகொள் ளவும் உதவி புரிகின்றது. இந்த விருதானது வெற்றிக்கான சிறந்த செயற்பாட்டு உத்திகளை எல்லோரிடையேயும் பரப்புவதற்கு உதவுவதுடன், வெற்றிபெற்றவர்க ளுக்கு ஆசிய பசிபிக் தரவிருது போன்ற ஏனைய விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் தகுதியினையும் வழங்குகின்றது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் ஒரு பின்னூட்டல் அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பயனடைகின்றனர். இந்த விருதான்து பொதுவாக ஒக்டோபர் 14ம் திகதி சர்வதேச தரப்படுத்தல் தினத்தைக் கொண்டாடும் முகமாக வழங்கப்படுகின்றது.

நீங்கள் ஒரு தொழில் முனைவோராகவோ, நுகர்வோரா கவோ இருக்கலாம், உங்களுக்கு தரப்படுத்தல், அளவீடு மற்றும் தர முகாமைத்துவம் பற்றி ஏதாவது சந்தேகங்கள் இருப்பின், மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ, எல்விடிகல மாவத்தை, கொழு ம்பு 08, தொ.பே.,ல 0094 112671 567-72, Fax 94 112671 579, Email info@slsi.lk, இணைய த்தளம் http://www.slsi.lk இனை அணுகவும்.





சாளினி சஞ்சீவன்
உதவிப் பணிப்பாளர், சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் பிரிவு,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை எண்ணிக்கை அதிகரிப்பு பிரேரணையை லக்ஸ்மன் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

**தேசிய அரசாங்கத்தின் அமைச்சர் எண்ணிக்கையை அதிகரிக்கக்கோரும் பிரேரணையை அவைத்தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். இதன்படி அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 45 ஆக உயரவுள்ளது.**



பிரதியமைச்சர்கள் 30 பேரும் ராஜாங்க அமைச்சர்கள் 10பேரும் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இதில் 30 அமைச்சரவை உறுப்பினர்கள் 17 பிரதியமைச்சர்கள் மற்றும் 3 ராஜாங்க அமைச்சுக்கள் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஒதுக்கப்படுகின்றன. ஏனையவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஒதுக்கப்படவுள்ளன.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவரும் இன்று நியமிக்கப்படவுள்ளார்.(இ-7)

# ஆப்கான் முன்னாள் ஜனாதிபதி ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு

ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேசியுள்ளார்.

கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐந்தாம் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக கர்சாய் இலங்கை விஜயம் செய்துள்ளார்.

இந்நிலையில் பாதுகாப்பு மாநாட்டில் நேற்று முன்தினம் விசேட உரை ஒன்றையும் கர்சாய் ஆற்றியிருந்தார்.


இதேவேளை நல்லெண்ண நோக்கில் முன்னாள் ஜனாதிபதி கர்சாய் இலங்கை ஜனாதிபதியை சந்தித்துள்ளார் எனவும் இரு தரப்பு உறவுகள் குறித்து இச்சந்திப்பில் அதிகம் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 120 |
| தக்காளி | 80 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 60 | 80 |
| கரட் | 120 | 100 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 120 |
| பாகற்காய் | 140 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 30 | 30 | 50 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 100 | 100 |
| போஞ்சி | 140 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 25-60 | 35-40 |
| இராசவள்ளி | 120 | 200 | — |
| வெங்காயப்பூ | 180 | 120 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 |

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனைத்து விடயங்களிலும் ஒத்துழைப்புடன் செயற்படும்

## சம்பந்தன் தெரிவிப்பு



இந்த நாடாளுமன்றம் மிகவும் தீர்க்கதரிசனமான முறையில் செயற்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

அத்துடன், சபாநாயகரின் கௌரவம் ஜனநாயக ரீதியில் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியல் நிறுவனங்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், நீதியாகவும் செயற்படுத்த வேண்டும் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அனைத்து விடயங்களிலும் ஒத்துழைப்புடன் செயற்படும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 477

Search for people, places and things  Nagendram  Home

ராகுலன் பாலா




கீர்த்தனா கருணாகரன்





தாரணி பரமசிவம்




ப்ரியமுடன் விஷ்ணு




சிந்தியா சிந்தி




அன்பு சாலினி

கடவுள்: மனிதா, உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?

மனிதன்: இந்தியாவிலேர்ந்து அமெரிக்காவிற்கு ரோடு போட்டுச் கொடு சாமி!!

கடவுள்: அது கஷ்டமாச்சே...கடல்ல எப்பிடிப்பா ரோடு போட முடியும் வேறு ஏதாவது கேள்.

மனிதன்: அப்ப என் மனைவி பேச்சைக் குறைக்கணும், நான் சொல்றதை மட்டும்தான் கேட்கணும், எதிர்த்து பேசக்கூடாது ...!!! அப்படி செய்யுங்க...சாமி...!!

கடவுள்: அமெரிக்காவுக்கு ரோடு சிங்கிளா, டபுளா...?

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர அமைதியை பெற்றுத்தருமா ஒப்பந்தம்?

....இந்நிலையில், தலைநகர் ஜூபாவிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும், எந்தவொரு கொள்கை விடயமாக இருந்தாலும் துணை ஜனாதிபதியுடன் ஆலோசிக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய அம்சங்களை ஏற்றுக் கொள்ள ஜனாதிபதி யோசிக்கிறார்.

ஆனால், அமைதி ஒப்பந்தத்தை வரவேற்றுள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை, ஜனாதிபதியின் கவலைகளையெல்லாம் பொருட்படுத்துவதாக இல்லை. செப்டெம்பர் 1 ஆம் திகதிக்குள் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை முழுமையாக அமல்படுத்த வேண்டும் அல்லது பொருளாதாரத் தடைகளைச் சந்திக்க வேண்டும் என திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

அமைதி ஒப்பந்தத்துக்கு முரணாக யார் செயற்படுகிறார்களோ, அவர்களுக்கு எதிராக ஆயுதத் தடை, பொருளாதாரத் தடைகளை விதிப்பது தொடர்பான வரைவுத் தீர்மானத்தை தயார் செய்துவிட்டு அமெரிக்காவும் காத்திருக்கிறது.

அரசுக்கும், அரசு எதிர்ப்புப் படைக்கும் இடையே இதற்கு முன்னர் ஏழு முறை சண்டை நிறுத்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. ஆனால், அவை சில நாள்களிலேயோ, சில மணி நேரங்களிலேயோ முறிந்தும் போயிருக்கின்றன. ஆதலால், அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாவதைவிட, அது அமல்படுத்தப் படுவதில்தான் அதன் வெற்றி அடங்கியிருக்கிறது.

ஆனால், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பொருளாதாரத் தடை எச்சரிக்கைக்கு பணிந்து மட்டுமே ஒப்பந்தத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டிருப்பதும், அதை அமல்படுத்துவதற்கான எண்ணம் அவருக்கு இல்லை என்பதையும் அவரே மறைமுகமாக ஒப்புக் கொண்டிருப்பதும் சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை என்பதை உணர்த்துகின்றன.

பிரிட்டன் எகிப்திய கூட்டாட்சியில் இருந்து 1956 இல் சுதந்திரம் பெற்றது சூடான். ஆனால், அதன் தெற்குப் பகுதி இராணுவ அதிகாரிகளின் முனைப்பில், தெற்கு சூடான் தன்னாட்சி அதிகாரம் கோரி போராடத் தொடங்கியது. 1972 இல் தெற்கு சூடானுக்கு தன்னாட்சி அதிகாரம் கிடைத்த பிறகே அந்தப் போராட்டம் ஓய்ந்தது.

ஆனால், 1983 இல் சூடான் அரசு அந்த தன்னாட்சி அதிகாரத்தை ரத்து செய்ததைத் தொடர்ந்து, தெற்கு சூடானில் சூடான் மக்கள் விடுதலை இயக்கம், அதன் ஆயுத அமைப்பான சூடான் மக்கள் விடுதலை இராணுவம் தலைமையில் மீண்டும் போராட்டம் தொடங்கியது.

ஒரு வழியாக 2011 இல் ஐ.நா. சபை ஏற்பாட்டில், பொது வாக்கெடுப்புத் தீர்மானப்படி தெற்கு சூடான் தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

இடைப்பட்ட அந்த 20 ஆண்டுகளில் தெற்கு சூடானின் சுதந்திரப் போராட்டத்தில் சுமார் 15 இலட்சம் பேர் உயிரிழந்தனர். அவ்வாறு இலட்சக்கணக்கான உயிர்களை இழந்து சுதந்திரம் பெற்ற தெற்கு சூடான், இன்று இருவரின் அதிகாரப் போட்டியில் மீண்டும் போர்க்களமாக மாறி வருகிறது.



ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டத் துடிக்கும் தங்களது நாட்டின் தலைவர்கள், வெறும் வார்த்தைகளைவிடவும் மேலாக எதையாவது செய்ய வேண்டும் என தெற்கு சூடான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். வெறுமனே சண்டையிட்டு அப்பாவி பொதுமக்களைக் கொன்று குவித்து, மீதம் இருப்பவர்களையும் நாட்டைவிட்டு வெளியேறச் செய்துவிட்டு யாரை ஆளப் போகிறீர்கள்? இதுவும் அந்நாட்டு மக்கள் எழுப்பும் கேள்விதான். (முற்றும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 269**

## அஹங்காரத்தை விடுதல்

...இந்தப் பத்தியின் வாயிலாக, கிருஷ்ணர் உலகிற்கு சரணாகதியே முடிவான உறுதியான இறுதியான முறையாகும்.

அஹங்காரமற்ற நிலைக்கும் மோக்ஷத்திற்கும் சுருக்கு வழியாகும் என்பதைக் காட்டுகிறார்.

கிருஷ்ணரையும் அர்ஜுனனையும் பற்றி இன்னொரு அருமையான கதை இருக்கிறது....

ஒரு மாலையில் கிருஷ்ணரும் அர்ஜுனனும் ஒன்றாக அமர்ந்து அளவளாவிக்கொண்டு இருந்தனர்.

திடீரென்று கிருஷ்ணர் ஒரு காகத்தைச் சுட்டிக்காட்டிச் சொன்னார், அர்ஜுனா, அந்தக் கறுப்புக் காகத்தைப் பார்!

அர்ஜுனன் அந்தத் திசையில் பார்த்துச் சொன்னான், ஆமாம் கிருஷ்ணா, நான் பார்க்கிறேன்!

சில நிமிடங்கள் கழித்து, கிருஷ்ணர் ஆச்சரியத்தில் கத்தினார், அர்ஜுனா அந்தப் பச்சைக்காகத்தைப் பார்! அர்ஜுனன் சொன்னான், ஆம் கிருஷ்ணா நான் பார்க்கிறேன்!.

கிருஷ்ணர் வெறுமனே அர்ஜுனனைச் சோதிப்பதற்காகக் கேட்டார், அர்ஜுனா, நீ எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கிறாய்! எங்காவது பச்சைக்காக்கா இருக்கிறதா?

நீ எவ்வாறு அதைப் பார்த்திருக்க முடியும்? அர்ஜுனன் சொன்னான், கிருஷ்ணா, நீ அதைப் பச்சைக் காக்கா என்று சொன்ன பொழுது நான் அதைப் பச்சைக் காக்காவாகப் பார்த்தேன்!

அர்ஜுனனுடைய புலன்கள் கிருஷ்ணரிடம் சரணடைந்துவிட்டன.



குருவிடம் புலன்களைச் சரணாகதி செய்வதே, எக்காலத்திலும் மிகவும் கடினமான செயலாகும்.

குரு பிரபஞ்ச இருப்புத் தன்மையேதான்; அவர் உருவத்தில் இருப்பினும் உருவமற்றவர்.

உங்களுடைய புலன்கள் எப்பொழுது குரு சொல்வதை மட்டுமே உணர்கிறதோ, அப்பொழுது நீங்கள் சரணாகதியில் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறீர்கள்.

சரணாகதி என்பது என்ன? சரணாகதி என்ற வார்த்தை மிகவும் ஆழமான அர்த்தம் கொண்டது.

நாம் அதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையாயின் த்வறாகப் புரிந்துகொண்டு விடுவோம்!

ஒரு மோசமான தவறைச் செய்து விடுவோம். ஆழமான உண்மைகளைத் தவறாகப் புரிந்துகொண்டு விடுவோம்.

ஒரு சின்னக் கதை...

ஒரு இரவில் இரண்டு குடிகாரர்கள் தெருவில் ஒரு ஹேலஜன் விளக்கைக் கடந்து சென்று கொண்டு இருந்தனர்.

ஒருவன் அதைப் பார்த்து ஆச்சரியத்தில் கத்தினான், பார், நமக்காக சூரியன் வந்திருக்கிறது!

மற்றவன் சொன்னான், இல்லை, இது இரவு நேரம். அது சந்திரன்! முதலாமவன் தொடர்ந்தான், அது மஞ்சள் நிறத்தில் இருப்பதால் சூரியன்தான்!

அப்பொழுது மூன்றாவதாக ஒரு குடிகாரன் அவர்களைக் கடந்து சென்றான்.

அவர்கள் அவனிடம் கேட்டனர், ஐயா தயவு செய்து சொல்லுங்கள், இது சூரியனா அல்லது சந்திரனா?

அவன் சொன்னான், நான் இந்த ஊருக்குப் புதுசு.

எனக்கு ஒன்றும் தெரியாது.

(பலத்த சிரிப்பு)

அதனால் நீங்கள் தெரியாத ஒருவரிடம் கேட்டால், ஒரு பதிலையும் பெற மாட்டீர்கள் அல்லது தவறான பதிலைப் பெறுவீர்கள்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொட சம்பவத்தின் போர்வையில் ராணுவத்தை காட்டிக்கொடுக்க வேண்டாம்

## ஞானசார தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட சம்பவத்தின் போர்வையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவை காட்டிக் கொடுக்க வேண்டாம் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்க ஆட்சியில் கடந்த 2001ம் ஆண்டு மிலேனியம் சிட்டி சம்பவத்தின் ஊடாக புலனாய்வுப் பிரிவினர் காட்டிக்கொடுக்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் புலனாய்வுப் பிரிவு பாரியளவில் வீழ்ச்சி அடையவும், அதிக எண்ணிக்கையிலான புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் கொலை செய்யப்படவும் காரணமாகியது.

புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை வெளியிடுவதனால் எதிர்கால தேசியப் பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படக் கூடும்.

தமிழ்ப் பிரிவினைவாதம் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படாத நிலையில், இந்நாட்டின் புலனாய்வுப் பிரிவினரை எதிரிகளுக்கு காட்டிக் கொடுக்கும் நடவடிக்கை மிகவும் ஆபத்தானது.

சில வெளிநாட்டு சக்திகளின் தேவைகளுக்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் இலக்கு வைக்கப்படுகின்றனர். புலனாய்வுப் பிரிவினரை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை இந்தியாவிற்கு இடையில் வலுவான உறவுநிலை ஏற்பட்டுள்ளது

## அரவிந்த் குப்தா கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் வலுவான உறவு ஏற்பட்டுள்ளதாக இந்திய துணைப் பாதுகாப்பு ஆலோசகர் டாக்டர் அரவிந்த் குப்தா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நேற்று முன்தினம் ஆரம்பமான 2015 ஆம் ஆண்டு பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பிராந்திய வலயத்தின் அபிவிருத்திக்கு இவ்வாறான உறவுகள் அத்தியாவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் தொடர்ந்தும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும், இளையவர்கள் அதிகளவில் அடிப்படைவாதத்தை தழுவத் தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இணைய வழிகளின் ஊடாக பல்வேறு தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை தடை செய்ய அனைத்து தரப்பினரும் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மேலும் அதிகளவான அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடுமெனவும்கூட்டாக இணைந்து சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தேவைக்காகவே தேசிய அரசாங்கம்

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு



அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தேவைக்காகவே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதாக தேசப்பற்றுடைய தேசிய அமைப்புக்களினது ஒன்றிய அமைப்பாளர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அபயராமயவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மகிந்த அல்லாவிட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பொருத்தமானவர்.

எதிர்க்கட்சியில் அமர்ந்தாலும் ஆளும் கட்சியை விமர்சனம் செய்யக் கூடாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்கத்தை விமர்சனம் செய்ய முடியாவிட்டால் எதிர்க்கட்சியின் பயன் என்ன என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.?

தேசிய அரசாங்கம் ஆளும் கட்சியினதோ அல்லது எதிர்க்கட்சியினதோ தேவைக்காக உருவாக்கப்படவில்லை.

புறச்சக்தி ஒன்றின் தேவைக்காக பலவந்தமாக தேசிய அரசாங்கம் திணிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேவையென்றால் அரசாங்கம் அமைத்திருக்கலாம்.

மைத்திரிபால சிறிசேனவிற்கு தேவையென்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னிலையான அரசாங்கம் ஒன்றை அமைத்திருக்க முடியும்.

எனினும் அவர் தனது கட்சியை தோற்கடித்து ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியீட்டச் செய்தார்.

இந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்கொள்வதற்கு தூண்டப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் அமெரிக்காவும் இந்தியாவுமே செயற்பட்டுவருகின்றன என குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பொம்மையா...? உண்மையா...?

பிறவித் தளையில் மறுபடி நம்மைக் கட்டுவன அசுர இயல்புகள். முக்தி என்ற விடுதலைக்கு காரணமானவை தெய்வ இயல்புகள். நமது அசுரத்தனமான இயல்புகளில் இருந்து விலகி தெய்வீக இயல்புகளை நோக்கிப் பயணம் செய்வதே உயர் வாழ்வு. வாழ்க்கைப் பயணம்.

ஒரு குழந்தை பிறக்கும் போது தாய், தந்தை இருவரது மன இயல்புகள் எப்படி இருக்கிறன என்பதைப் பொறுத்தே குழந்தையின் இயல்புகள் தீர்மானமாகின்றன. எனவே தெய்வீக எண்ணங்களுடன் பெற்றோர் சங்கமம் ஆனால் தெய்வீக எண்ணமுடைய குழந்தைகளைத் தோற்றுவிக்கலாம்.

மிருக வெறியைத் தணித்துக் கொள்வதற்காக மட்டும் உறவு கொள்வதும், அப்போது வியத்துப்போல கருவுறுவதும் மேலும் மேலும் அசுரமனிதர்கள் தோன்றக் காரணமாகின்றது. ஒரு கிளார்க் பதவிக்குக் கூடத் தகுதி வேண்டியிருக்கிறது. ஆனால் தாய் தந்தை என்ற உயர்ந்த பதவிக்கு தகுதி ஏதாவது விதிக்கப்பட்டு இருக்கிறதா?

காசியர் என்ற முனிவர், மாயை என்ற அசுரப் பெண் மீது காமம் கொண்டு கண்மூடித்தனமாகக் கலவி செய்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகன், அசமுகி என்று அசுரப்பிள்ளைகளைப் பெற்றார் என்கிறது கந்தபுராணம்.

எனவே மனிதன் தெய்வமாகும் திருப்பணி கருவறையி லேயே, பெற்றோரின் பள்ளி அறையிலேயே தொடங்க வேண்டும் என்கிறேன். முறையான இந்துத் திருமணங்களிலே வேள்வி செய்து கலசத்தில் புனித நீர் வைத்து, அந்தக் கும்பங்களில் சிவனையும் பார்வதியையும் அல்லது லட்சுமியையும் நாராயணனையும் ஆவாகனம் (எழுந்தருள)செய்து, அந்த நீரால் தம்பதிகளை நீராட்டி அதன் பிறகே பள்ளியறைக்கு அனுப்புவர். சாந்தி முகூர்த்தம் என்று நேரம் குறித்து அந்நேரம் உறவு கொள்க என்பார்கள்.

தெய்வீகமான நேரத்தில், தெய்வீகமான எண்ணங்களுடன் பெற்றோர் கலந்தால் தெய்வீகமான பிள்ளைகள் தோன்றுவார்கள். அசுரத்தனம் அழிந்து தெய்வீகம் மலர வருங்காலத்திற்குத் திட்டம் வைத்திருந்தனர் நம் முன்னோர். மீண்டும் அந்த மரபைப் பேணுங்கள். நாம் தெய்நிலை எய்த நம் வழியாடு முக்கிய காரணம். வழிபடுதல் என்ற சொல்லில் இருந்து பிறந்தது வழியாடு என்கிற சொல். நாம் வணங்கும் தெய்வ வடிவம், நம் வழியாட்டு முறை நம் அசுரத்தனத்தைத் தீர்மானிக்கிறது. இதையும் பகவத் கீதையே சொல்கிறது.

சத்வ குணத்தில் இருக்கும் மனிதர்கள் தேவர்களை வழிபடுகின்றனர். ரயோ குணத்தில் இருப்பவர்கள் அசுரர்களை வழிபடுகின்றனர். தமோ குணத்தில் இருப்பவர்களோ பூத பிசாசுகளை, உடம்பிலிருந்து நீக்கிய உயிர்க் கூட்டங்களை வழிபடுகின்றனர் என்கிறது கீதையின் பதினேழாம் அத்தியாயத்தில் 4-வது ஸ்லோகம்.

உங்கள் அசுர இயல்பையும் தெய்வ இயல்பையும் உங்கள் வீட்டுப் பூஜை அறையில் உள்ள படங்கள் கூட நிர்ணயம் செய்கின்றன. சின்னச் சின்ன சாமியார்கள், சாமியாடிகள், குறி சொல்லிகள், துர் தேவதைகள், பிணம் ஆனவர்கள், ஆகக் கூடியவர்கள் படங்களைப் வீட்டுப் பூஜை அறையிலிருந்து தயவு செய்து வெளியில் எறியுங்கள். உங்கள் காமம், கோபம், லோபம் இவையெல்லாம் இந்த மனிதப் பதர்கள் நமக்கிட்ட தண்டனையாகக் கூட இருக்கலாம்.

பகவான் ரமணர், விவேகானந்தர், ராமகிருஷ்ணர் போன்றவர்கள் படங்களுக்கு இது பொருந்துமா என்று கேட்டு என்னைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம். அவர்கள் படங்களைக் கூட உங்கள் பாட அறையில், வரவேற்பு அறையில் வைக்கலாம். அவர்கள் உருவங்களைவிட அவர்கள் வெளியிட்ட உண்மைகளை வழிபடப் பழகுங்கள். அவர்கள் படங்கள் முக்கியமே அல்ல. அவர்கள் சொன்ன பாடங்களே மிக மிக முக்கியம். உங்களை உயர்த்த, அவர்களைப் பூசிப்பதை விட அவர்கள் சொன்னதை யோசிப்பதே முக்கியம் என்பதே என் கட்சி.

படங்களை விடுங்கள் பாடங்களைத் தொடுங்கள். பொம்மைகள் முக்கியமல்ல உண்மைகளே முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றிவிட்டதா அமெரிக்கா?

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியதும், ஜெனிவா களம் குறித்த கலக்கத்துடன் காத்திருந்த இலங்கை அரசாங்கத்துக்கு, ஆறுதல் அளிக்கும் செய்தியோடு வந்திறங்கியிருந்தார் தெற்கு, மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால்.

இந்த ஆண்டில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், அவர் மேற்கொண்ட மூன்றாவது பயணம் இது.

கடந்த ஜனவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, பெப்ரவரி 2 ஆம் திகதி கொழும்பு வந்திருந்தார் நிஷா பிஸ்வால். அந்தப் பயணத்தின்போது, அவர் கொழும்புக்கு ஒரு புதிய சமிக்ஞையைக் காட்டிவிட்டுச் சென்றிருந்தார்.

மார்ச் மாதம் நடந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 29 ஆவது அமர்வில், இலங்கை தொடர்பான ஐ.நா விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருந்த சூழல் அது.

போர்க்குற்றச்சாட்டுத் தொடர்பான உள்நாட்டு விசாரணை ஒன்றை நடத்த புதிய அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதியை அளித்தால், இலங்கையைக் காப்பாற்றும் வகையில், ஐ.நா விசாரணை அறிக்கைய பிற்போடச் செய்வதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்று அப்போது இலங்கைக்கு தெளிவாக கூறியிருந்தார் அவர்.

இதன் பின்னர்தான், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜெனிவா, வோஷிங்டன், லண்டன், நியூயோர்க் என்று பறந்து பறந்து வாக்குறுதிகளைக் கொடுத்தார். அதன் பின்னரே, புதிய அரசாங்கத்துக்கு கால அவகாசம் அளிக்கும் வகையில், ஐ.நா விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டது.

அந்த முடிவு ஐ.நா பொதுச் செயலராலோ ஐ.நா மனித உரிமை ஆணையாளராலோ எடுக்கப்படவில்லை. அந்த முடிவுக்கு முழுப்பொறுப்பும் அமெரிக்காதான் காரணம். அதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்தான் நிஷா பிஸ்வால்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், தனது இராஜதந்திர நகர்வுகள் மூலம், சீனாவின் பக்கத்தில் இருந்து இலங்கையை அமெரிக்காவின் பக்கத்துக்கு கொண்டு போய்ச் சேர்த்திருந்தார் அவர்.

அதையடுத்து, கடந்த மே மாத தொடக்கத்தில், இரண்டாவது தடவையாக மீண்டும் கொழும்பு வந்தார் அவர். அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் வரலாற்று ரீதியான பயணத்தின் போது கூடவே அவரும் வந்திருந்தார்.

ஜோன் கெரி தனது பயணத்தை முடித்துக் கொண்டு கிளம்பிய பின்னரும், நிஷா பிஸ்வால் கொழும்பில் தங்கியிருந்து வெசாக் வழிபாடுகள் கொண்டாட்டங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் இணைந்து பங்கெடுத்து விட்டே அமெரிக்கா சென்றார்.



அமெரிக்கா தொடர்பாக சிங்கள பௌத்த மக்களிடம் காணப்பட்ட வெறுப்பைக் களைவதற்காக அவர் மேற்கொண்ட அடுத்த இராஜதந்திர நகர்வே இது.

இப்போது மூன்றாவது முறையாக வந்து சென்றிருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து, சரியாக இரண்டு வாரங்கள் கழித்து அவர் கொழும்பு வந்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான ஐ.நா விசாரணை அறிக்கை, குறித்த விவாதம் நடப்பதற்கு சரியாக ஒரு மாதம் முன்னதாக அவரது இந்தப் பயணம் இடம்பெற்றது.

அவருடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச்செயலர் ரொம் மாலினோவ்ஸ்கியும் கொழும்பு வந்திருந்தார்.

இவரும் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டவர்தான். ஏப்ரல் மாதம் கொழும்பு வந்த இவர், வடக்கிற்கும் பயணம் செய்ததுடன், முள்ளிவாய்க்காலிலும், போரில் இறந்தவர்களுக்காக மலர் அஞ்சலி செலுத்தி அதனை தமது டுவிட்டரிலும் வெளியிட்டிருந்தார்.

இவர்கள் இருவரும், இம்முறை இலங்கை வந்ததன் நோக்கமே, அமெரிக்காவின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிப்படுத்துவதற்காகத்தான்.

அதாவது, புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள சூழலில், அதனுடன் ஒத்துழைப்பையும் உறவுகளையும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையிலும், சர்வதேச நெருக்கடிக்குள் இருந்து இலங்கையைக் காப்பாற்றும் வகையிலும் தான் இவர்களின் பயணம் அமைந்திருந்தது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை என்ற பொறிக்குள் இலங்கையைத் தள்ளிச் சென்ற அமெரிக்கா தான், இப்போது அந்தப் பொறியில் இருந்து காப்பாற்றுகின்ற ஆபத்பாந்தவனாகவும் வந்து நிற்கிறது.

2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டு வந்த அமெரிக்கா, போர்க்குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியது.

அதற்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் போதிய ஆதரவும் கிடைத்தது. ஆனால், இலங்கை அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இதன் பின்னர், 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம், மீண்டும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது அமெரிக்கா. அதில், உள்நாட்டு விசாரணையை ஊக்குவிக்கும் அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணையையும் மேற்கொள்ள வலியுறுத்தியது.

அந்த தீர்மானத்தையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்தது. அதன் விளைவாகவே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்போது, இந்த விசாரணை அறிக்கை வெளிவரத் தயாராகியுள்ள நிலையில்தான், அமெரிக்கா இப்போது, இலங்கைக்கு ஆதரவாகத் திசை திரும்பியிருக்கிறது.

இலங்கைக்கு ஆதரவளிக்கும் தீர்மானம் ஒன்றை உள்நாட்டு விசாரணைகளுக்கு கால அவகாசம் அளிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றை ஜெனிவாவில் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார் நிஷா பிஸ்வால்.

ஐ.நா விசாரணை அறிக்கையின் பின்னர், போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க, ஜெனிவா கூட்டத்தொடரில் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்த்திருந்தது தமிழர் தரப்பு.

ஆனால், அதற்கான வாய்ப்புகள் மிகமிக அரிதானது என்பது இராஜதந்திர மட்டத்தில் தொடர்பில் இருந்தவர்கள், மனித உரிமைகள் சார் நடவடிக்கைகளில் தொடர்பில் இருப்பவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

சர்வதேச விசாரணையின் மூலம், நியாயம் பெற்றுக் கொள்ளலாம் என்ற தமிழர் தரப்பின் கருத்து சரியானதேயானாலும், சர்வதேச புறச்சூழல் அதற்குச் சாதகமாக உள்ளதா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இருந்த சூழல் இன்றில்லை. எல்லாமே மாறியிருக்கிறது.

இன்று மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இல்லை. குற்றச்சாட்டுகளை விசாரிக்க முடியாது என்று கூறும் யாரும் இப்போது அதிகாரத்தில் இல்லை. குற்றச்சாட்டுகளை மறுக்கும் திராணியும் எவருக்கும் இல்லை. குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ளாவிடினும், உள்நாட்டுக்குள் விசாரிக்கிறோம் என்று கூறுகின்ற அரசாங்கம்தான் இப்போது இருக்கிறது. (தொடரும்)

-என்.கண்ணன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான அகதிகள் ஹங்கேரியில் ஆர்ப்பாட்டம்

## ரயில் சேவைகள் ஸ்தம்பிதம்



(ஜேர்மனி)

**ஜேர்மனி செல்வதற்கு அனுமதிக்கவேண்டும் எனக்கோரி ஆயிரக்கணக்கான அகதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் ஹங்கேரி நாட்டின் ரயில் நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அத்துடன் அனைத்து ரயில் சேவைகளும் இரத்து செய்யப்பட்டன.**

உள்நாட்டு போர் காரணமாக ஆபிரிக்கா மற்றும் சிரியாவில் இருந்து ஏராளமான மக்கள் ஐரோப்பாவுக்கு அகதிகளாக செல்கின்றனர். இந்த ஆண்டில் மட்டும் 3 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகள் அங்கு சென்றுள்ளனர்.

அவர்களில் பலர் உரிய ஆவணங்கள் இல்லாமல் கள்ளத்தனமாக செல்வதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாயன்று 100இற்கு மேற்பட்ட அகதிகள் கையில் பயணச்சீட்டுடன் ஹங்கேரியில் தலைநகர் புத்தாபிஸ்டில் உள்ள ரயில் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

தங்களை ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியா செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கூறினர். பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் நெரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாக அனைத்து ரயில் சேவையும் நிறுத்தப்பட்டது.

இதேபோல் ஸ்பெயின் நாட்டுக்குள் செல்லவேண்டும் என்பதற்காக காரின் என்ஜினில் மறைத்துவந்த அகதியை உயிருக்கு ஆபத்தான நிலையில் ஸ்பெயின் பொலிஸார் கைது செய்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவரை பரிசோதித்த வைத்தியர்கள் சில மணி நேரங்கள் அவர் கூடுதலாக காரின் என்ஜினில் மறைந்திருந்தாலும் வெப்பம் காரணமாக அவர் மரணமடைந்திருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளனர். இதேபோல் ஏராளமான அகதிகள் ஐரோப்பாவுக்குள் சென்றே ஆகவேண்டும் என்று தங்கள் உயிரையும் பணயம் வைக்கும் செயல் ஐரோப்பிய நாடுகளில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இதே வேளை நூற்றுக்கணக்கான குடியேறிகளை ஏற்றிய ரயில் வண்டிகள் ஹங்கேரியில் இருந்து ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவை சென்றடைந்துள்ளன. ஹங்கேரி எல்லையில் பல மணிநேரம் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையிலேயே அவை தற்போது ஆஸ்திரியாவை சென்றடைந்துள்ளன. எனினும் இவ்வாறு வியன்னா சென்றடைந்த பெரும்பாலான குடியேறிகள் உடனடியாக ஜேர்மனி செல்லும் ரயில் வண்டிகளில் ஏறியுள்ளனர்.(3-7)

# முகமது நபியின் வாழ்க்கை வரலாறு திரைப்படம் ஈரானில் பெரும் வரவேற்பு

## சன்னி முஸ்லிம்கள் தரப்பில் எதிர்ப்பு

(டெஹ்ரான்)

முகமது நபியின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட ஷியா முஸ்லிம் நாடான ஈரானிய திரைப்படம் அங்கு பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில் அரபு உலகின் ஒருசில சன்னி முஸ்லிம் மதத் தலைவர்கள் அந்த திரைப்படத்தை தடை செய்யுமாறு ஈரானை வலியுறுத்தியுள்ளனர்.

ஈரான் அரசின் அனுசரணையில் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட இயக்குநரான மஜீத் மஜிதின் இயக்கத்தில் "இறை தூதர் முஹமது" என்ற திரைப்படம் கடந்த வியாழக்கிழமை ஈரானில் 140 திரையரங்குகளில் வெளியிடப்பட்டது.

அதிக வரவேற்பு பெற்றிருக்கும் இந்த திரைப்படம் வசூலில் சாதனை புரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

40 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த திரைப்படம் ஈரானில் தயாரிக்கப்பட்ட அதிக செலவு கொண்ட திரைப்படமாகவும் உள்ளது.

"மேற்குலக இஸ்லாமிய எதிர்ப்பின் புதிய அலைக்கு எதிராக போராடவே இந்த் திரைப்படத்தை எடுக்க தீர்மானித்தேன். மேற்குலகின் இஸ்லாம் பற்றி வியாக்கியானம் அது முற்றுமுழுதாக வன்முறை மற்றும் தீவிரவாதம் கொண்டதாக பார்க்கப்படுகிறது" என்று மஜீத் ஈரானிய சஞ்சிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இறைதூதரின் வாழ்க்கை வரலாற்றின் முதல் பாகமாக வெளியாகி இருக்கும் இந்த திரைப்படம் 171 நிமிடங்கள் கொண்டதாகும். இதில் இறைதூதரின் குழந்தை பருவம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

எனினும் இஸ்லாமிய கட்டுப்பாடுகளுக்கு அமைய இந்த திரைப்படத்தில் இறைதூதர் கதாபாத்திரத்தின் முகம் காண்பிக்கப்படுவதில்லை. அந்த கதாபாத்திரத்தில் நடிக்கும் சிறுவனை பின் புறமாகவும் நிழலாகவுமே கமரா காண்பிக்கிறது.

அதேபோன்று இறைதூதரின் கதாபாத்திரத்தில் நடிக்கும் குறித்த சிறுவனின் தனித்துவம் வெளிப்படுத்தப்படவில்லை.

இவ்வாறு அவதானத்துடன் இந்த திரைப்படம் எடுக்கப்பட்ட போதும் சன்னி முஸ்லிம்களின் மதிப்பிற்குரிய நிறுவனமான எகிப்தின் அல் அஸ்ஹர், அதிருப்தியை வெளியிட்டிருப்பதோடு, இந்த திரைப்படத்திற்கு தடை விதிக்கவும் ஈரானை வலியுறுத்தியுள்ளது.

"இந்த விவகாரம் ஏற்கனவே தீர்மானம் ஒன்றுக்கு வந்ததாகும். "ரிஆ (இஸ்லாமிய சட்டம்) இறைதூதரின் உருவத்தை காண்பிப்பதை தடுக்கிறது" என்று அல் அஸ்ஹரின் இஸ்லாமிய கோட்பாடுகள் துறையின் தலைவரான பேராசிரியர் அப்துல் பத் தாஹ் அல்வாரி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த திரைப்படத்திற்கு இசையமைத்த முன்னணி இசையமைப்பாளரான சமி யூசுப், திரைப்படம் பற்றி பெரும்பாலான விமர்சனம் அரசியல் பின்னணி கொண்டது" என்று ரொய்ட்டருக்கு குறிப்பிட்டுள்ளார். (3-7)

# பட்டாசு தொழிற்சாலையில் வெடி விபத்து; 5பேர் பலி

(மேட்ரிட்)

ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மேட்ரிட்டின் புறநகர் பகுதியில் பட்டாசு தயாரிக்கும் இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் தொழிலாளர்கள் பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆனால் அவர்கள் வருவதற்குள் தொழிற்சாலையில் உள்ள பட்டாசுகள் முழுவதிலும் தீ பரவியதால், அடுத்தடுத்து வெடிவிபத்து ஏற்பட்டது.

இதனால் சிறிது நேரத்தில் தொழிற்சாலை முழுவதும் தீ பரவி அந்த இடமே கரும் புகையில் மூழ்கியது. இந்த வெடி விபத்தில் சிக்கி 5 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 6 பேர் படுகாயம் அடைந்தனர். 10 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். படுகாயமடைந்த 6 பேரையும் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (3-7)

# பெண்ணுக்கு 100 சவுக்கடி



ஆப்கானிஸ்தானில் தவறான தொடர்பு வைத்திருந்த ஆண் மற்றும் பெண்ணுக்கு 100 சவுக்கடி கொடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தை சேர்ந்த ஒரு பெண் மற்றும் ஆண் ஆகியோர் தவறான தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து இருவருக்கும் 100 சவுக்கடி தண்டனையாக விதிக்கப்பட்டது.

அதன்படி பலரும் கூடியிருந்த இடத்தல் பர்தா அணிந்த அந்த பெண் முழங்கால் இட கட்டாய ப்படுத்தப் பட்டார். பின்னர் மிருகத தின் தோலினால் செய்யப்பட்ட சவுக்கால் அவருக்கு 100 அடி வழங்கப்பட்டது.

இந்த தண்டனை முழுவதும் அரசாங்கத்தின் ஆதரவுடன் தான் வழங்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக அம்மாகாண ஆளுநரின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை ஷரியா சட்டத்தின்படி வழங்கப்பட்டது. இது மற்றவர்களுக்கு ஒப்பானதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (3-7)

# ஹக்கானி தீவிரவாத குழு மீது தாக்குதலை தீவிரப்படுத்துங்கள்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவுறுத்து

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் சிலதினங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் ஒரு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் இராணுவ தளபதி ரஹீல் ஷெரீப்பையும் சந்தித்து பேசினார்.

அப்போது பாகிஸ்தானை புகலிடமாக கொண்டு செயற்படும் ஹக்கானிவலைச்சமூகம் என்னும் தீவிரவாத குழு மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி அவர் வலியு றுத்தினார.

சூசன் ரைஸ் தனது சந்திப் பின்போது பாகிஸ்தான் தலை வர்களிடம் கூறியது குறித்து அமெ ரிக்காவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் நெட் பிரைஸ், வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் கூறியதாவது: ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நிறுவிய பல்வேறு கட்டுமானங்கள் மீது அண்மையில் ஹக்கானி தீவிரவாத குழுவினர் தாக்குதலை நடத்தினர். இந்த குழுவினர் பாகிஸ்தானின் எல்லையோர பகுதியான வடக்கு வசிரிஸ்தானை புகலிடமாக கொண்டுள்ளனர்.

இவர்கள் மீது பாகிஸ்தான் நடத்தும் தாக்குதல்கள் போதுமானவை அல்ல. அதை பாகிஸ்தான் இன்னும் தீவிரப்படுத்தவேண்டும். அப்போதுதான் இப்பிராந்தியத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்படும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இராணுவ நடவடிக்கையின் போது வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் இருந்து ஹக்கானி தீவிரவாதிகள் தப்பியோடி விடுகின்றனர் என்று பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இந்த தீவிரவாதிகள் பதுங்கியுள்ள எல்லையோர பகுதிகளில் தாக்குதல்களை பாகிஸ்தான் வலுவாக நடத்தவேண்டும். அதேநே ரம பாகிஸ்தான் தனது அண்டை நாடான ஆப்கானிஸ்தானுடன் நட்பு றவை இன்னும் மேம்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் எடுத்துக் கூறப்பட்டது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போர்க்குற்ற அறிக்கை அமெ. அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை, அமெரிக்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வரும் போர்க்குற்ற விசாரணை அறிக்கை அமெரிக்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் அதிகாரியான சன்ட்ரா பேடேஸினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் பதினைந்து பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் ஆணையாளர் சஹிட் அல் ஹுசெய்ன் மற்றும் ஜெனீவாவிற்கான அமெரிக்கப் பிரதிநிதி கெயின் ஹார்பர் ஆகியோருக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது சர்வதேச தலையீட்டுடன் கூடிய உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றின் மூலம் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்ற செயல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்த மனித உரிமை ஆணையாளர் இணங்கியுள்ளதாக சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)




# புதிய தேர்தல் முறைமையை அமுல்படுத்த சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐ.தே.கவுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு வருட காலத்திற்குள் புதிய தேர்தல் முறையொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

புதிய சபாநாயகராக கரு ஜயசூரிய தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவரை வாழ்த்தி உரையாற்றும் போதே நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர், பாராளுமன்ற சம்பிரதாயங்களை முழுமையாக மதிக்கும் ஒருவர் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். உங்கள் மீதான அளப்பரிய நம்பிக்கையின் காரணமாகவே நீங்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றீர்.

அந்த நம்பிக்கையை மதித்து சகலரையும் சமமாக நடத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றோம். பாராளுமன்றம் தொடர்பில் மக்களுக்கு உள்ள தவறான அபிப்பிராயங்களை மாற்றி மதிப்பு நிறைந்த இடமாக மாற்ற வேண்டும்.

நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட நீங்கள் மக்களின் எண்ணங்களை அறிந்து செயற்படக்கூடியவர். பாராளுமன்றத்தில் புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகம் செய்வது தொடர்பில் நீங்கள் முன்னின்று செயலாற்றியுள்ளீர்கள்.

கடந்த அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்தின் கீழ் தேர்தல் முறையை மாற்ற முயற்சிக்கப்பட்டது. ஐ.தே.கவுடன் தற்பொழுது செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு வருட காலத்தினுள் புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் பொறுப்புக் கூறக்கூடிய எம்.பி ஒருவரை நியமிக்கும் புதிய தேர்தல் முறை நாட்டுக்கு மிக அவசியமாகும்.

இந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்று ஒரு வருட காலத்தினுள் அதனை நிறைவேற்றப் பங்களிக்க வேண்டும். இதன் மூலம் ஒரு வருட காலத்தினுள் மக்கள் மன மகிழ்ச்சி அடையக்கூடிய விடயமொன்றை செய்து முடிக்கலாம்.

19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களை துரிதமாக செயற்படுத்தி அதன் பலன் மக்களைச் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய சபாநாயகர்களைவிட உங்களுக்கு பல முக்கிய பொறுப்புக்கள் காத்திருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தாஜுடீனின் வாகனம் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

ரகர் வீரர் வசிம் தாஜுடீன் விபத்துக்குள்ளான வாகனம், தமது நிறுவனம் விற்பனை செய்யவில்லை என கார் இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

குறித்த வாகனத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யும் நிறுவனமே இவ்வாறு நீதிமன்றில் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸிடம் அறிக்கை சமர்ப்பித்ததோடு, இவ் வாகன மாதிரி தங்கள் நிறுவனத்தின் ஊடாக நேரடியாக கொள்வனவு செய்ய முடியாதென தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் இறக்குமதியாளர்கள் ஊடாகவோ அல்லது, தனிப்பட்ட ரீதியில் இவ்வாகன மாதிரி இறக்குமதி செய்யப்படும் என குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ் விபத்தின் காரணமாக வாகனத்தின் ஸ்டீரிங் கழன்று விழுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் தீப்பற்றியதன் காரணமாக அதிகமாக வாகனம் எரிந்துள்ளன,

தீப்பற்றியதற்கு காரணம் வாகனம் மோதியதனால் தான் என கருத்தை வெளியிட முடியாதென குறித்த நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## உணவகம் மூடல் காரணமாக 24 மில்லியன் ரூபா இழப்பு


(கொழும்பு)

கோட்டை ரயில் நிலையத்தின் உணவகம் மூடியதன் விளைவாக 24.6 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 2 ஆம் திகதி மேலாண்மையால் இவ்வுணவகம் மூடப்பட்டது. இங்கு மாத வருமானம் 4.1 மில்லியன் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிற்சங்கத்தின் ஊடாக, மே மாதம் 18 ஆம் திகதி, கடிதத்தின் ஊடாக, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டதாக தொழிற்சங்கம் தெரிவிக்கின்றது. (இ-7)

# சஜினுக்கு எதிரான வழக்கு டிசெம்பர் வரை ஒத்திவைப்பு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்தனவிற்கு எதிரான இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலப்பகுதியில் தனது சொத்து விபரங்களை வெளிப்படுத்த தவறியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் சஜின் டி வாஸ் குணவர்தனவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சாட்சியாளர்கள் நீதிமன்றிற்கு வருகை தராததன் காரணமாக குறித்த வழக்கை பிற்போடுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தைக் கோரியது.

அதன்படி கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய குறித்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக உத்தரவிட்டார். (இ-7)

# இன்றைய இளையதலைமுறையினர் லௌகீக வாழ்க்கைக்குள் முடக்கம்

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆதங்கம்

இன்றைய இளம் தலைமுறையினர் ஆடம்பர வாழ்க்கை காரணமாக ஆன்மீகத்திலிருந்து விலகி லௌகீக வாழ்க்கை முறைக்குள் சென்றுள்ளனர் என வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

நல்லைக்குமரன் மலர் 23 ஆவது வெளியீட்டு விழாவும் பேராசிரியர் க.தேவராஜாவிற்கு யாழ் விருது வழங்கும் வைபவமும் நேற்றுக் காலை நாவலர் கலாசார மண்டபத்தில் சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ்.மாநகரசபையின் முன்னாள் ஆணையாளருமான செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தனக்கு நட்டம் வரும் போது கடவுளை நினைப்பதும் பின்னர் தனது கஷ்டங்கள் நீங்கிய பின்னர் கடவுளை மறந்து விடுவதும் இன்றைய மனித பண்புகளாகவுள்ளன.

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு 23 வருடங்களாக நல்லைக்குமரன் நூலை சிறந்த முறையில் வெளியிட்டு வருகின்றது.

மாநகரசபைக்கு பல ஆணையாளர்கள்.முதல்வர்கள் வந்து சென்றுள்ளனர். எனினும் நல்லைக்குமரன் நூல் தொடர்ந்தும் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும். மற்றும் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வோடு சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்கின்றவர்களிளை யாழ். விருதை வழங்கிகௌரவிப்பதும்சிறப்பம்சமாகும்.

இதேபோல் என்றும் நல்லைக்குமரன் நூல் சீரும் சிறப்புடனும் வெளிவர யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகார குழுவிற்கும் நூலின் ஆசிரியர் குழுவிற்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்கள் இடமாற்றம்

## வடக்கு மாகாண சபையின் எதிர்ப்பையடுத்து

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட சிங்களவர்கள் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.**

வடக்கு மாகாணத்திலிருந்து விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடத்திற்கு தகுதியான 5 ஆயிரத்து 87 பேர் விண்ணப்பம் செய்திருந்த போதிலும் குறித்த வெற்றிடத்துக்கு உள்வாங்கப்படவிருந்த 361 பேரில் 332 பேர் சிங்களவர்களாகவும் 29 பேர் மட்டுமே தமிழர்களாகவும் இருந்தனர். எனினும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த வடக்கு விவசாயிகள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் வடக்கு மாகாண சபை, வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் என்போர் இது விடயத்தில் கவனம் செலுத்தியிருந்தனர். இந்நிலையில் குறித்த நியமனம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு கொண்டுவந்த பிற்பாடும் இரகசியமாக குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இது குறித்து கடந்த அமர்வில் பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டு எதிர்க்கட்சி உறுப்பினரினால் பிரேரணை ஒன்றும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உரையாற்றுகையில், போர் எங்களுடைய விவசாயத்தைப் பெருமளவுக்குப் பாதித்திருக்கிறது. இந்நிலையிலேயே வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் குறித்த சிங்களவர்கள் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித்தார். (இ-4)

# அருள் நெறி விழா

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா தினமும் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று புதன்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் திருமதி. ச.மஞ்சுளாதேவி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை வேலணை பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் திருமதி. த.விஜிதா நிகழ்த்தவுள்ளார். கலை நிகழ்வுகளாக அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் குழு நடனம் மற்றும் ப.பிரியங்கா–தனி நடனம்,சு.நிருசியன்,ச.சங்கவி, ஜெ.நவீன்,ப.பிரியங்கா,அ.நர்மதா ஆகியோரது பேச்சு, மடத்துவெளி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வி.கம்சா,இ.ஜனனி, அ.சேனுஜா ஆகியோரது பேச்சு,திருவேளாங்காட்டு சித்தி விநாயகர் அற நெறிப் பாடசாலை மாணவி ஜ.எழில்நிலா–பேச்சு, நீலியம்பனை அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் பஜனை,செல்லக்கதிர்காம அறநெறிப் பாடசாலை கீழ்ப்பிரிவு மாணவர்கள் வழங்கும் நாடகம் மற்றும் மத்தியபிரிவு மாணவர்கள் வழங்கும் வில்லிசை, ச.நிலக்சனா, த.அஜந்தா, கே.நுசானி ஆகியோரது தனிநடனம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-5)

### அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல்

யாழ்.மாவட்ட கலை கலாசார பேரவையில் இணைய ஆர்வமுள்ள கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள முடியும் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். எனவே ஆர்வமுடைய கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் தத்தமது பிரதேச செயலகங்களின் கலாசார பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

### இசைப் பேருரை

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் கந்த புராணத் தொடர் இசைப் பேருரை தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மாவினால்வழங்கப்பட்டு வருகிறது.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் காவிரி தந்த கணபதி எனும் கந்தபுராணத் தொடர் இசைப்பேருரை இடம்பெறும்.(இ-5)

### ஆன்மீக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின்ஓர் அங்கமாகவதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமியினால் வழங்கப்பட்டு வருகின்ற ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் சாதனையாளர்கள் சாதனை படைத்தது எவ்வாறு எனும் ஆன்மிக அருளுரை இடம்பெறும். (இ-5)

### தெய்வீக இசையரங்கு

நல்லூர்க்கந்தன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின் றது.இதற்கமைய இன்று வியாழக்கிழமை பாடல்–திருமதி.விக்னேஸ்வரி நரேந்திரா, வய [illegible] என்பன இடம்பெறவுள்ளது. (இ-5)

# மாகாண முதல்வர் பதவிகள் இரத்து

நாடாளுமன்ற உறுப்பினர்களாக சில மாகாணங்களின் முதலமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதனைத் தொடர்ந்து, அந்தப் பதவிகள் இரத்தாகியுள்ளன.

மேல், வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களின் முதலமைச்சர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது நாடாளுமன்ற அமர்வில், குறித்த மூன்று முதலமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவ்வாறு பதவிப் பிரமாணம் செய்து கொண்டதனைத் தொடர்ந்து மாகாண முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சுப் பதவிகள் அனைத்தும் இரத்தாவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாணசபையின் முதலமைச்சராக பிரசன்ன ரணதுங்கவும் வடமேல் மாகாண முதலமைச்சராக தயாசிறி ஜயசேகரவும் ஊவா மாகாணசபையின் முதலமைச்சராக ஹரீன் பெர்னாண்டோவும் கடமையாற்றி வந்தனர்.


நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியதனைத் தொடர்ந்து முதலமைச்சர் உள்ளிட்ட சகல அமைச்சுப் பதவிகளும் இரத்தாகியுள்ளன.

இந்த மூன்று மாகாணசபைகளினதும் பொறுப்பு தற்போது மாகாண ஆளுநர்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

வெற்றிடமாகியுள்ள முதலமைச்சர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மீளவும் அமைச்சர் பதவிகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மாகாண முதலமைச்சருடன் நான்கு அமைச்சர்கள் பதவி வகிக்க சட்டத்தில் இடமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று மாகாணசபைகளினதும் முதலமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ள மாகாண சபை உறுப்பினர்கள் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.மாகாண முதலமைச்சர்களை தெரியும் நடவடிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)




### வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே!

ஆட்கடலில் தேரதுவும் மலைபோல் நிற்க
ஆயிரமாய் இளையரெலாம் அன்பு பொங்கி
பாற்கடலைத் தேவர்களும் கடைந்தாற் போல
பாம்பெனவே நீண்ட பெரும் வடத்தைப் பற்றி
நாட்டவரும் வியப்பெய்த நலமே பொங்க
நழுங்காமல் தேரதனை இழுக்கும் காட்சி
கூட்டதனின் பெருமை சொலும் தமிழர்களும்
கொண்டாடிக் கந்தனையே குறியாய்க் கொள்வர்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

### அவனிருக்க அச்சமேன்!

வேலிருக்கு துணையிருக்கு; இரு
விழிகளில் நீர் கசிவெதற்கு; பக்கம்
நாலிரண்டு திசைகளிருக்கு ;அங்கும்
நல்லை முருகனின் அருளிருக்கு; பிதா
சூலிமகனின் ஒளியிருக்கு; மனதை
சூழ முயலும் இருள் விலக்கு; எங்கும்
சாலிகை போலே அவனிருக்க ;மிகு
சஞ்சலம் வாழ்வில் எதற்கெதற்கு!

அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

### நலமாய் அருள்புரிய வேண்டுவோமே

நல்லைநகர் நடுவமைந்த நல்லைக் கந்தன்
நல்லதமிழ் சைவம் நலம் திகழ
நல்லூரில் ஆறுமுகநாவலரை ஆக்குவித்து
நால்வேதமும் தமிழும் நலிவிழந்து
வெல்லும் நிலைக்கு வெளிக் கொணர்ந்து
இலத்தீனைத் தமிழ்ப்படுத்தி நிலைநிறுத்தி
நல்லை நகர்க் கந்தன் நாடெங்கும்
நலமாய் அருள்புரிய வேண்டுவோமே.

ஆ.வடிவேலு
தும்பளை.

### நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

உன்னருள் இல்லை யானால்
உலகமே வாழு மாமோ
நின்னருட் பெருக்கா லன்றோ
நீள்வையம் சுழலு தையா
அன்பிலே பெருகி வாழும்
அடியார்கள் தமக்கு மேலாம்
இன்பத்தை நல்கும் வேளே
எம்முடை நல்லைக் கந்தா

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்


கிருபா லேணர்ஸ்



அரச அங்கீகாரம் பெற்ற A தர
சாரதி பயிற்சி பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 4353, 077 722 5292
நெல்லியடி: 021 300 6550, 071 454 6957


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னாட்சி உரிமைகோரி நேபாளில் மாதேசி இன மக்கள் போராட்டம்

## பொலிஸ்நிலையம், வருவாய்துறை அலுவலகம் தீ வைப்பு; துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலி

(காத்மாண்டு)

**நேபாளத்தில் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. அதன்படி அங்கு 7 புதிய மாநிலங்கள் உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாதேசி என்ற இன மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தெராய் பகுதியில் தங்களுக்கு தன்னாட்சி உரிமையுடன் கூடிய தனி பகுதி அமைத்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**



தற்போது, இப்போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. பீகாரை ஒட்டியுள்ள பர்சா மாவட்டத்தில் ராலாயுல் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளது. எனவே அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அதை பொருட்படுத்தாமல் நேற்று முன்தினம் பர்சா மாவட்டத்தில் மீண்டும் கலவரம் மூண்டது. போராட்டத்தில் ஈடுபட்ட மாதேசி இனத்தவர் பொலிஸ் நிலையம், வருவாய்த்துறை அலுவலகம் ஆகியவற்றை தீ வைத்து எரித்தனர். வாகனங்களும் தீக்கிரையாக் கப்பட்டன.

வன்முறை கட்டுக்கடங்காமல் போகவே கூட்டத்தினர் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினர். அதை தொடர்ந்து ராலாயுல் பகுதியில் நடந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர். பாரா மாவட்டத்தில் கலால்யா நகரில் நடந்த துப்பாக்கி சூட்டில் இதுவரை 22 வயது வாலிபர் ஒருவர் உயிரிழந்தார். இதனால் துப்பாக்கி சூட்டில் 5 பேர் பலியாகியுள்ளனர். இத்தகவலை நேபாள உள்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் லஸ்மி பிரசாத் தகவல் தெரிவித்துள்ளார். (3-7)

# அவுஸ்.பாதுகாப்பு அமைச்சர் பிரதமர் மோடியுடன் சந்திப்பு



(புதுடில்லி)

இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் கெவின் ஆண்ட்ருவ்ஸ், நேற்று பிரதமர் மோடியை சந்தித்து இரு தரப்பு உறவு பற்றி பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளுக்கு இடையே கூட்டு கடற்படை இராணுவ பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நிலையில், இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில் அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் கெவின் ஆண்ட்ருவ்ஸ் நேற்று இந்தியா வந்தடைந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரை சந்தித்த, கெவின் ஆண் ட்ருவ்ஸ் இந்திய-பசுபிக் பகுதியில் பாதுகாப்பு வழங்குவதில் இருநா டுகளும் இணைந்து செயற்படுவது குறித்து விவாதித்தார்.

இன்று மத்திய பாது காப்பு அமைச்சர் மனோகர் பரிக்க ருடன் உயர்மட்ட அளவிலான பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளது. அதில் கெவின் ஆண்ட்ருவ்ஸ் கலந்து கொள்ளவுள்ளார். (3-7)

# இந்தியா- பாகிஸ்தான் பேச்சு நடத்த வேண்டும்

## ஐ.நா.செயலர் பான் கி மூன் அழைப்பு

எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று ஐ.நா. பொது செயலாளர் பான் கீ மூன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மாதம் திட்டமிடப்பட்ட இந்தியா - பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு செயலாளர்கள் நிலையிலான பேச்சு கடைசி கட்டத்தில் ரத்து செய்யப்பட்டது குறித்து ஐ.நா. கவலை தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இது குறித்து பான் கீ மூன் செய்தித் தொடர்பாளர் ஸ்டீஃபன் ஜாரிக் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறும்போது, நாங்கள் உலக நாடுகளின் பிரச்சினைகளை கூர்ந்து கவனித்து வருகிறோம். அதேபோல பாகிஸ்தானும் இந்தியாவும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்பதுதான் எங்களது விருப்பம்.



தற்போதைய எல்லைப் பிரச்சினைகளுக்கு நேரடி பேச்சு வார்த்தை மட்டுமே தீர்வாகும் என்று பான் கீ மூன் கூறியதாக ஜாரிக் தெரிவித்தார். (3-7)

# நிதி நிறுவன அதிபர் கொலை; 9பேருக்கு ஆயுள் தண்டனை

(திருவனந்தபுரம்)

இந்தியாவின் பிரபல நிதி நிறுவனமான முத்தூட் கேரளாவை தலைமையிடமாக கொண்டு செயற்படுகிறது. இந்த நிதி நிறுவனத்தின அதிபர் பால் முத்தூட் ஜார்ஜ்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி பால் முத்தூட் ஜார்ஜ் தனது காரில் ஆலப்புழா மாவட்டம் சம்பக்குளத்திலுள்ள அவருக்கு சொந்தமான விருந்தினர் மாளிகைக்கு சென்றபோது, காரில் வைத்தே படுகொலை செய்யப்பட்டார்.

இன்னொரு காரில் வந்த கும்பல் இவரது கார் மீது மோதியதில் ஏற்பட்ட தகராறில் இந்த கொடூர கொலை நடந்தது. இது கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பால் முத்தூட் ஜார்ஜ் கொலை தொடர்பாக ஜெயச்சந்திரன், காரி சதீஷ், சத்தார், சதீஷ்குமார், ராஜீவ் குமார், ஷினோபால், பைசல், சுல்பிக்கர், சபீர், அபி, ரியாஸ், சித்திக், இஸ்மாயில், அனிஷ் ஆகிய 14 பேர் கைது செய்யப்ப ட்டனர்.

இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்தது. இது தொடர்பான விசாரணை திருவனந்தபுரம் சி.பி.ஐ. நீதிமன்றில் நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி நேற்று முன்தினம் பரபரப்பு தீர்ப்பு வழங்கினார்.

ஜெயச்சந்திரன் உட்பட முதல் 9 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், தலா ரூ.50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. மற்ற 4 பேருக்கு தலா 3 வருடம் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. கடைசி குற்றவாளியான அனிசுக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர் மட்டும் விடுதலை செய்யப்பட்டார். (3-7)

# இமாச்சலில் 200 அடி பள்ளத்தாக்கில் பேருந்து விழுந்து 18 பேர் உயிரிழப்பு



(சிம்லா)

இந்துஸ்தான்- திபெத் தேசிய நெடுஞ்சாலையில் நத்பா என்ற இடத்தில் 200 அடி ஆழம் கொண்ட பள்ளத்தாக்கில் பேருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த சம்பவம் [illegible] அதிர்ச் சிம்லா [illegible] ரிகாங்க் பியோ என்ற இட த்திலிருந்து ரம்பூர் என்ற இடத்திற்கு சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கிற்குள் பாய்ந்தது.

உருண்டு சென்ற பேருந்து, ஆற்றுக்கு சில மீற்றர் உயரத்தில் உள்ள சட்லஜ் என்ற நதிமுகத்தில் சிக்கிக் கொண்டது.

இதற்குள் பேருந்து உருண்டதில் கம்பிகள் கிழித்தும் பேருந்திலிருந்து வெளியே விழுந்தும் பல பயணிகள் பலியா கினர். காயமடைந்த பயணிகள் சிலர் ஜன்னல் வழியாக ஆற்றில் குதித்து உயிர் தப்பினர்.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 15 பேர் பலியாகினர். 3 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். 12 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 4 பேரின் உடல நிலை கவலைக் கிடமாகவுள்ளது.

பேருந்து விழுந்ததைப் பார்த்து பதறிய உள்ளூர் மக்கள் சம்பவ இடத்தில் குவிந்தனர். அவர்களின் உதவியுடன் மீட்புப்படையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பவத்தை அறிந்தவுடன் தான் அதிர்ச்சி அடைந்ததாகவும், இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.(3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு நனைகிறது (இறைச்சி குளிர்ந்து விடும்) என்று ஓநாய் அழுததாம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணை மூலமே தமிழருக்கு நியாயம் கிடைக்கும்

பாராளுமன்றத்தின் புதிய அமர்வு; ஜனாதிபதியின் உரை; அமைச்சர்கள் பதவியேற்பு; புதிய சபாநாயகர்; எதிர்க்கட்சித் தலைமைப் பதவி என்ற விடயங்களில் தென்னிலங்கை ஆட்சிப் பீடம் மூழ்கிப் போயுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி இரா.சம்பந்தருக்குக் கிடைக்கலாம் என்று சம்பந்தர் தரப்பு நம்புகிறது. என்ன நடக்கும்? என்பது இன்று தெரியவரலாம். எது எப்படியாயினும் இரா.சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கவில்லையாயின் அது அவர் தரப்பிற்கு பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை ஒரு புறம் இருக்க, சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் நூறுவீத நம்பிக்கையோடு இருந்த தமிழ் மக்கள் சர்வதேச விசாரணை சாத்தியமில்லை என்ற அறிகுறிகளைக் கண்டு கதிகலங்கிப் போயுள்ளனர்.

தமிழினம் சந்தித்த இழப்புகளுக்கான தீர்வு சர்வதேச விசாரணை என்பதாக மட்டுமே இருக்க முடியும் என்று நம்பியிருந்த நிலையில், அமெரிக்காவின் நிலைமாற்றம் தமிழ் மக்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கையில் தமிழினம் சந்தித்த அழிவுகள், இழப்புகள் கொஞ்சமல்ல. 2009ஆம் ஆண்டில் வன்னியில் நடந்த இன அழிப்பு உலகில் இடம்பெற்ற மிகப்பெரிய மனிதப் பேரவலம்.

கடந்த கால ஆட்சியில் நடந்த இன அழிப்பு தொடர்பில் அமெரிக்கா சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அதனை அமுல்படுத்தும் என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது.

எனினும் அந்த நம்பிக்கையை அமெரிக்கா மெல்லக் கலைப்பது போலத் தெரிவது தமிழ் மக்களிடம் தீராக் கவலையை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை மகிந்தவின் ஆட்சிக்கு முடிவு கட்டுவது என்ற அதன் காரியம் நடந்து முடிந்தமை ஒரு ஆறுதலைத் தரலாம். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை எல்லா ஆட்சியாளர்களுமே பேரினவாதத்தை பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர். இதனால் எவரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரப் போவதில்லை.

இப்போது ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோரின் அரசில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறப்பட்டாலும் அதன் நோக்கம் சர்வதேச விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்வதே அன்றி, இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கமன்று.

ஆக, தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை காண்பது கட்டாயம் என்ற நிலை ஏற்படவேண்டுமாயின் சர்வதேச விசாரணை ஒன்றே அதற்கான வழியாகும்.

அதேநேரம் சர்வதேச விசாரணை என்பது தமிழின அழிப்பு மற்றும் போர்க்குற்றம் தொடர்பிலானது. இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது என்பதற்காக சர்வதேச விசாரணையை தவிர்ப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

எனவே சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு. இத்தகையதொரு சர்வதேச விசாரணை இடம்பெறுவதன் ஊடாகவே தமிழ் மக்களின் பாதுகாப்பு எதிர்காலத்தில் உறுதி செய்யப்படும்.

அதேசமயம் உள்ளக விசாரணை என்பது வெறும் சாட்டுப் போக்கானது அன்றி அதில் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கமாட்டாது. ஆகையால் சர்வதேச விசாரணையை முன்னெடுப்பது அமெரிக்காவின் தார்மீகக் கடமையாகும்.

# மகிந்தவை நேரில் குற்றஞ்சாட்டிய பல்கலைக்கழகப் பேராசிரியர்

(கொழும்பு)

போரை முடிவுக்கு கொண்டு வந்து முக்கிய பணியை செய்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தனது பதவிக்காலத்தை நீடித்து கொண்டு கட்சிக்கு பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தியதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் இதனை கூறும்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒரே மேடையில் அருகில் அமர்ந்திருந்தனர்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க முதல் தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேன வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களின் காலத்தில் கட்சிக்கு ஏற்பட்ட நன்மைகள் குறித்து பேராசிரியர் பேசினார்.

கதுருவெல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் சம்மேளனத்தில் சிறப்புரையாற்றுவதற்காக பேராசிரியர் விஜேசூரிய அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

சந்திரிகா குமாரதுங்கவுக்கு பின்னர், கட்சியின் தலைமை பொறுப்பு மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்தது. அவரது தலைமையில் நாட்டின் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட சாதகமான பணிகளை மறந்து விட முடியாது.

நீண்டகால போரை முடிவுக்கு கொண்டு வந்ததை நாங்கள் கௌரவமான முறையில் நினைவுகூருகிறோம்.

இந்த கௌரவம் அவருக்கு நாட்டு மக்களிடம் இருந்து கிடைக்கும்.

அதேபோல் சிறிமாவோ பண்டாரநாயக்க தனது பதவிக்காலத்தை இரண்டு வருடங்களால் அதிகரித்து போல, மகிந்த ராஜபக்ஷவும் பாரதூரமான தவறை செய்தார்.

இந்தத் தவறினால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்ட தலைவிதி மிகவும சோகமானது எனவும் பேராசிரியர் விஜேசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## மறுத்த மகிந்த

மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனம் வழங்கப்பட்ட போதிலும் அவர் அதில் அமராது வேறு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

சபைக்குள் மகிந்த ராஜபக்ஷ சென்ற போது எதிர்க்கட்சியின் ஆசனங்களில் அமர்ந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்றதுடன் அவரை எதிர்க்கட்சி ஆசனங்களின் முன்வரிசைக்கு அழைத்துச் சென்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச செயலாளர் துமிந்த திஸாநாயக்க, மகிந்த ராஜபக்ஷவின் கைகளை பிடித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்ததுடன் அவருக்கு முன்வரிசை ஆசனம் ஒன்றை காட்டினார்.

துமிந்த திஸாநாயக்கவின் முதுகில் தட்டிய மகிந்த ஆசனத்தை நோக்கி நடந்து சென்றார். மகிந்தவை கண்டதும் ஆசனத்தில் இருந்து எழுந்த நிமால் சிறிபால டி சில்வா, எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமருமாறு கேட்டுக் கொண்டார். எனினும் மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்துக்கு அருகில் உள்ள ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். (எ-11)

## கைக்குண்டு யாழில் மீட்பு

எழுதுமட்டுவாழ் பகுதியிலுள்ள காணியொன்றில் இருந்து வெடிக்கக் கூடிய நிலையில் இருந்த கைக்குண்டு, நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் உள்ள ஒருவர் தனது காணியை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது மேற்படி கைக்குண்டு தென்பட்டுள்ளது. இது தொடர்பில் காணி உரிமையாளர், பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு தெரியப்படுத்தி அவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-11)

# மகிந்தவை சந்தித்த சீனப் பிரதிநிதிகள்!

(கொழும்பு)

சீனாவில் இருந்து வந்த பிரதிநிதிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர்.

இலங்கையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தமை, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை அதிகரித்து, இலங்கையை உலகின் பலமிக்க நாட்டின் உற்ற நண்பனாக்கியமை குறித்து 'இந்த பிரதிநிதிகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் முன்னோடியான மாதுளுவாவே சோபித தேரர், நல்லாட்சி அரசாங்கத்தின் அமெரிக்க சார்பு கொள்கைகளுக்கு எதிராக அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அண்மைய காலத்தில் இலங்கையின் வேகமான அபிவிருத்திக்காக வீதிகள், துறைமுகங்கள், விமானங்கள் போன்றவற்றுக்கு சீனாவிடம் இருந்து பாரிய உதவிகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சீனாவுக்கு எதிர்ப்புக் காட்டி அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம், மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்த அதிவேக வீதி அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க சீனாவிடம் இருந்தே தொடர்ந்தும் நிதியுதவிகளை பெற்றுக்கொள்வதாக சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. (எ-11)

**சின்மயா மிஷன்**

**நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி**

வினா: 7) a) ஞானத்தைக் குறித்து நிற்கும் படம் எது?
b)(I) சகலகலாவல்லி மாலையை இயற்றியவர் யார்?
(II) நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படும் காலம் யாது?
(III) கலைமகள் உறையும் சாதனங்களாக கருதப்படுபவை என நீங்கள் கருதும் சாதனங்கள் 3 தருக?

**வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.**

## சத்திய தரிசனம்



### சகிப்புத் தன்மை வேண்டும்

❖ பறவை உயரமாக பறந்தாலும், முடிவில் மரக்கிளையில் அமர்ந்து தான் ஓய்வெடுக்கும். அதுபோல, கற்றவர்கள் எவ்வளவு அறிவு பெற்றிருந்தாலும், இறைவனை வணங்கினால் தான் அமைதி பெற முடியும்.

❖ தளராத நம்பிக்கை, தெய்வ சிந்தனை, சகிப்புத்தன்மை ஆகிய குணாங்களை வளர்த்துக் கொண்டு வாழ்வைப் புனிதமாக்குங்கள்.

❖ பிறருடைய கருத்துக்கு மதிப்பு கொடுங்கள். மற்றவர்களின் அந்தரங்க விடயங்களில் குறுக்கிடாமல் இருப்பதும் மேலான பண்பு.

❖ குடும்பம் என்பது சமூகத்தின் சிறுபகுதி. அதை முதலில் ஒழுங்குபடுத்துங்கள். குடும்பத்தை சீராக்கி விட்டால், சமூகமும் சீராகி விடும்.

❖ தீயவர்களையும் நல்வழிப்படுத்தவே கடவுள் முயல்கிறார். அனுபவத்தால் கிடைக்கும் பாடத்தை ஏற்று, அவர்களும் மனம் திருந்த வேண்டும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கிரகங்கள் என்பது என்ன?


கோள்களை கிரகங்கள் என்று கூறுவர். கிரகங்கள் என்பது சிவ பெருமானால் தத்தம் பணிகளுக்காக அமர்த்தப்பட்ட ஏவலர்கள். ஏவலர்கள் என்றால் வேலை ஆட்கள் என்பதாகும்.

ஒவ்வொரு ஆன்மாவானதும் அது அது செய்த முன் ஜென்மத்து பாவ புண்ணிய வினைப்படி இந்தப் பிறவியிலே என்னென்ன நல்லது கெட்டது நடக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கும்.

உதாரணத்திற்கு ஒருவனுக்கு சிரமப்பட வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தால் அந்த நேரத்தில் சனிக்கிரகம் அவனைப் பிடிக்கவேண்டும் என விதியிருக்கும். அப்போது அதைச் சரியாக அவைகள் செய்யவேண்டும். இப்படி சிவபெருமானால் அமர்த்தப்பட்டவர்கள் தான் கோள்கள் எனப்படும் நவக்கிரகங்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்மெரிசியஸ்சின் அதிரடி ஆட்டத்தால் பலாலி விண்மீன் சுப்பர் 8 இற்கு தகுதி



நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுப்பர் 8 லீக் சுற்றிற்கு தகுதிபெறும் போட்டியாக பலாலி விண்மீன் வி.க எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க மோதியது.

போட்டியின் தொடக்கம் முதல் விறுவிறுப்பாக அமைய 8 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணியின் வியூகத்தினை உடைத்து உதயதாஸ் கோல் ஒன்றினை அடித்து கணக்கினை ஆரம்பித்தார்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி மேலும் விறுவிறுப்படைய இரண்டாவது பாதியின் 08, 14, 17 ஆவது நிமிடங்களில் கன்மெரிசியஸ் (அருண்) தொடர்ச்சியாக 03 கோல்களை அடித்து அதிர வைத்தார்.

மேலும் ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் உதயதாஸ் கோலினை அடிக்க ஆட்டத்தில் விண்மீன் 5:0 என முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இறுதியில் றேஞ்சஸ் அணியின் மாதுஜன் ஒரு கோலினை அடிக்க ஆட்டம் 5:1 என முடிவுக்கு வந்தது.

மூன்று கோல்களை அடித்த கன்மெரிசியஸ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அருளானந்தசோதி அணிவிக்க அணிக்கான பரிசினை பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் பொருளாளர் தவனேந்திரராஜா வழங்கி கௌரவித்தார். (க)

## பள்ளிமுனை சென்லூசியஸ் சுப்பர் 8 இற்குத் தகுதி



வடமாகாண உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான வல்லவன் தொடர் உதைபந்தாட்ட தொடரில் பள்ளிமுனை சென் லூசியஸ் விளையாட்டுக்கழகம் சுப்பர் 8 இற்குத் தகுதி பெற்றுள்ளது.

நக்கீரன் விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான உதைபந்தாட்ட போட்டியில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 இற்கு நுழைந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தேசிய உதைபந்தாட்ட அணியில் யாழ். வீரர்கள் இருவர் தெரிவு




ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதிற்குட்பட்ட 43 ஆவது சர்வதேச காற்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டித் தொடர் சீனாவில் நடைபெற்று வருகின்றது.

ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதிவரை நடைபெறும் இப்போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணி சீனாவுக்கு பயணமாகியுள்ளது.

சீனா சென்ற 19வயதிற்குட்பட்ட இலங்கை காற்பந்தாட்ட அணியில் யாழ். ஹென்றிக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும் மன்னார் சேவியர் கல்லூரியின் மாணவரும் இடம்பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவன் செபமாலைநாயகம் யூட்சுபன் மற்றும் அமலதாஸ் மதுஸ்ரன் ஆகிய இரு மாணவர்களுமே யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவாகியுள்ளனர்.

மற்றைய வீரர் மன்னார் சேவியர் கல்லூரி மாணவர் தேவராஜா கிளிண்டன் ஆவார். (க)




யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அவர்கள் சண்டிலிப்பாய் கல்வளை கிராமத்தில் உள்ள விளையாட்டுக்கழக உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடியதோடு விளையாட்டுக்கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார். அவற்றைப் படத்தில் காணலாம்.

## இன்றைய போட்டிகள்

மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தீபஜோதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து Jaffna Post star விளையாட்டுக்கழகமும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வல்லியானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குடத்தனை உதயசூரியன் விளையாட்டுக கழகமும் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். கலைஒளி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்களஞ்சியமாக மாறும் சொகுசு விமான நிலையம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டிய சர்ச்சைக்குரிய பிரம்மாண்டமான மத்தல சர்வதேச விமான நிலையம் தற்போது புதியதொரு வகையில் பயன்பாட்டுக்கு வந்திருக்கிறது. தற்காலிகமாக நெல்லை சேமித்து வைக்கும் நெற்களஞ்சியமாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த விமான நிலையத்தில் இருக்கும் சரக்கு கிடங்குகளில் ஒன்றில் நெல்லை சேமித்து வைக்கப்போவதாக இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது.

இதன்மூலம் மாதத்துக்கு ஆறாயிரம் டொலர் வருமானம் கிடைக்கும் என்று அரசு கூறுகிறது. இந்த மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மகிந்த ராஜபக்ஷவின் சொந்த மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வெகு விமரிசையாக தொடக்கி வைக்கப்பட்டது.

ஆனால் வனவிலங்குகள் அதிகம் வசிக்கும் சூழலில் இந்த விமான நிலையம் அமைக்கப்பட்டிருப்பதனால் இங்கு வரும் விமானங்களுக்கும் பறவைகளுக்கும் இடையில் அடிக்கடி மோதல் ஏற்படுவதும் அதனால் உருவாகவிருந்த விபத்துக்கள் தவிர்க்கப்படுவதும் மிகப்பெரிய சர்ச்சையைத் தோற்றுவித்தது.

ஃபிளை டுபாய் என்கிற ஒரே ஒரு விமான நிறுவனம் மட்டுமே இந்த விமான நிலையத்தைத் தற்போது பயன்படுத்துகிறது.

இங்குள்ள சரக்கு கிடங்கில் சேமிப்பதற்காக கொண்டுவரப்பட்ட முதல் தொகுதி நெல் மூட்டைகளை ஏற்றி வந்த வாகனங்களை மறிப்பதற்கு விமான நிலைய ஊழியர்கள் சிலர் முயன்றனர். அனால் அவர்களால் அதை தடுக்க முடியவில்லை.

எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்றிய பொலிஸார் நெல்மூட்டைகளை கிடங்கில் கொண்டு சென்று சேமிக்கச் செய்தனர். (எ-11)

# அமெரிக்க தீர்மானம் கனடா அரசு ஆதரவு

ஜெனிவாவில் இம்மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30ஆவது கூட்டத்தொடரில இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா கொண்டு வரவுள்ள புதிய தீர்மானம் தொடர்பில் தாம் இதுவரை முடிவு எடுக்கவில்லை என கனடா அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான இலங்கையின் உள்நாட்டு விசாரணைக்கு ஆதரவாக அமெரிக்கா புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர உத்தேசித்துள்ளது. இந்நிலையில், இந்தத் தீர்மான த்தை ஆதரிப்பதா, இல்லையா என்பதை அந்தத் தீர மானம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே முடிவு செய்யப்படும் என்று ஒட்டாவாவில் உள்ள கனேடிய அரசாங்க பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். (எ-11)


# எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் என்ன இருக்கிறது?

■ ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவருக்கும் அடுத்த படியிலான பெரிய பதவி இதுவே. அத்துடன் எந்த வித முன்னறிவிப்பு எதுவும் இன்றி ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரையும் சந்திக்க முடியும்.

■ எதிர்க்கட்சி தலைவரின் கருத்தே எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடாக கொள்ளப்படுவதோடு எதிர்க்கட்சி தலைவரின் கோரிக்கையை தகுந்த காரணங்கள் இல்லாமல் ஜனாதிபதியோ பிரதமரோ புறக்கணிக்க முடியாது. (தீர்வு விடயத்தில் இது நமக்கு ஒரு வகையில் நன்மை பயக்கும் என்பது திண்ணம்)

இவ்வளவு வரப்பிரசாதங்களிலும் மிக முக்கியமானது கிட்டத்தட்ட 20-30 பணியாளர்களை பாராளுமன்ற காலம் முழுமையும் பணிக்கு அமர்த்தமுடியும் என்பது அவரது தனிப்பட்ட நலன்களுக்கு வெளியே 20-30 குடும்பங்கள் பயன்பெறக்கூடிய வரப்பிரசாதம் இது. (எ-11)

# நாடாளுமன்றில் தூக்கம்



(கொழும்பு)

புதிய நாடாளுமன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றும் போது முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா வழமையை போன்று உறங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் எட்டாவது நாடாளுமன்றின் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன, இதன்போது நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் அருகில் அமர்ந்திருந்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றும் போது நிமல் சிறிபால டி சில்வா உறங்கியுள்ளார்.

அத்துடன் நிமல் சிறிபால டி சில்வா முக்கிய நிகழ்வுகள் இடம்பெறும் பல சந்தர்ப்பங்களில இவ்வாறு உறங்குவதனை வழக்கமாக செய்து வருகின்றமையினால் அரசியல் துறையில் பிரபலமாக பேசப்படும் ஒருவராகி விட்டார். (எ-11)

# சர்வதேச விசாரணையை...

உதவி இராஜாங்க செயலர் நிஷா பிஸ்வால் இம்முறை உள்ளகப் பொறிமுறை ஒன்றுக்கு ஆதரவளிக்கப் போவதாக கூறிச் சென்றுள்ளார். அமெரிக்காவின் இவ் அறிவிப்பு குறித்து வடக்கு மாகாண சபை கடும் எதிர்ப்பு தெரிவித் திருக்கின்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் மௌனமாகவே இருந்து வருவதோடு ஒரு சிலர் மாறுபட்ட கருத்துக்க ளையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே வடக்கு கிழக்கு மக்களை ஓரணியில் திரட்டி இலங்கை மீது சர்வதேச விசாரணையே வேண்டும் என வலியுறுத்தும் வகையில் மேற்படி குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக பேராசிரியர் வி.ரி.சிவநாதனும் தலைமை ஒருங்கிணைப்பாளராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் செயலாளராக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவின் செயற்பாடுகள் குறித்து இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ள பத்திரிகையாளர் சந்திப்பில் விளக்கப் படவுள்ளதாக தலைமை ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

மேலும் சர்வதேச விசாரணையை கோரும் குறித்த இக் குழுவில் விருப்பம் உள்ளவர்கள் எவரும் இணைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அன்று யாழ்.பஸ் நிலையத்தில் மாபெரும் கையெழுத்து போராட்டமொன்றினை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)


**வேலைக்கு ஆள் தேவை**

யாழ் நகரப் பகுதியில் இயங்கும் பெண்களுக்கான தையல் நிலையத்துக்கு சாறிச்சட்டைகள் வெட்டித் தைக்கத் தெரிந்த வேலையாட்கள் தேவை.

(1665)

தொடர்புகளுக்கு-0776497251


# யாழ்.மாநகர சபையின் புதிய ஆணையாளராக வாகீசன்

(கொழும்பு)

யாழ் மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் இடமாற்றம் பெற்று வடக்கு மாகாணத்தின் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக பதவி ஏற்கின்றார். இவ் இடமாற்றத்தையடுத்து யாழ்.மாநகர சபையின் புதிய ஆணையாளராக கூட்டுறவு ஆணைக் குழுவின் செயலாளராகவும் மாகாண சபைக்கு பயிற்சி வழங்கல் பொறுப்பதிகாரியாதவுமிருந்த பொன்னம்பலம் வாகீசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டு 06ஆம் மாதம் யாழ் மாநகர சபையின் ஆணையாளராக பொறுப்பேற்று கொண்ட செ.பிரணவநாதன்,

தற்போது அவருடையபதவிக்காலம் மூன்றரை வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையில் அவரின் சுய விருப்பத்தின் பெரில் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார்.இவ் இடமாற்றம் நேற்று முன்தினம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. (ந-4)


**நீங்காத நினைவுகளுடன்**



மலர்வு 16 - 10 - 1964

மறைவு 16 - 07 - 2015

**அமரர் சதாசிவம் கணேஸ்வரன்**

மாண்புமிகு அதிபர் மனிதநேயம் கொண்ட மாமனிதர் மறைவினை என்றும் ஈடுசெய்ய முடியாது தவிக்கின்றது கல்விச் சமூகம். நாளை (04.09.2015) அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அஞ்சலியுரையும் யா/புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அனைவரையும் அழைக்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்

(C-1562)



**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் துன்னாலை வடக்கு புலோலி**

**மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல்-2015**

இவ்வாலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இடஒதுக்கீடு எதிர்வரும் 05.09.2015 சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்பட உள்ளது. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றையதினமே முழுமையாக செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

01.ஐஸ்கிறீம் கடை
02.கச்சான் கடை
03.இனிப்புக்கடை
04.புடைவைக்கடை

அறங்காவலர் சபை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி.
தொடர்பு:-021 226 3074, 021 205 6644

(சி-2012)



**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத் தவராகும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது.

● வயதெல்லை :- (20-60) ● கல்வித்தகைமை - G.C.E A/L

Note : பகுதி நேர வேலையில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். T.P. No. :0777 121 868

(1660)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாடகைக்கு

கொக்குவில் பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு. (1655)

தொடர்புகளுக்கு : 077 144 1000

### வகுப்புக்கள்

O/L இரண்டாம் மொழி (சிங்களம்) வகுப்புக்கள் ஆரம்பம் –
(1651) 05.09.2015 (வடமராட்சியில்)

தொடர்புகளுக்கு : 0777115876

### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர் களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். M .Rajan (1654)

தொடர்புகளுக்கு:-0772286054





## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி...

மாநாட்டில் உரையாற்றிய அவர் அணைமயில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்ச்சியாக அடைந்துவரும் தோல் விகளுக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அக்காரணங்கள் கண்டறியப்பட்ட பிறகு கட்சி மறுசீரமைக்கப்படுவது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கட்சி அவ்வகையில் சீரமைக்கப்படும போது, சகல இனத்தவரும் அதை ஏற்றுக் கொள்ளும் வகையில் இருக்க வேண்டும் எனவும் மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார்.

சர்வதேச ரீதியில் இலங்கை எதிர் கொள்ளும் சவால்களை எதிர்த்து வெற்றி பெறக் கூடிய வகையில் கட்சியின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முரண்பாடுகளை நீக்கி, இணக்கப்பாட்டுடன் கூடிய அரசியலை முன்னெடுப்பதன் மூலமே, அப்படியான சவால்களை சமாளித்து வெற்றியடைய முடியும் எனவும், மக்களின் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கட்சியின் அந்த வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய அவர் கூறினார்.

இந்த மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கு பற்றினார. ஆனால் மற்றொரு முன்னாள ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க பங்குபெறவில்லை. (எ-11)

## விசாரணையின் போது...

அவர் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சிலில் இலங்கையுடன் இணைந்து தீர்மானத்தைக் கொண்டு வரப்போவதாக அமெரிக்கா கூறியிருப்பது குறித்துப் பேசிய அலன், போர்க்குற்றம் குறித்த எந்த ஒரு முயற்சியிலும் சாட்சிகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட விடயங்களில் சர்வதேச உதவி தேவை என்று அலன் குறிப்பிட்டார்.

குற்றங்களுக்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கும் எந்த ஒரு முயற்சியிலும் நம்பகத்தன்மை இருக்க வேண்டுமானால், சாட்சிகளின் பாதுகாப்பு, புலனாய்வு, விசாரணை, ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவில் சர்வதேச தலையீடு தேவை என்று நினைக்கிறோம் என அலன் தெரிவித்தார்.

இலங்கையில் பொலிஸ்துறை, நீதித்துறை போன்றவற்றில் திறமையானவர்கள் இருந்தாலும் கடந்த 30 - 40 ஆண்டுகளில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் வெகு குறைவாகவே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும அலன் சுட்டிக்காட்டினார்.

கடந்த 30-40 ஆண்டுகளில் மனித உரிமை மீறலுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களை நீங்கள் விரல் விட்டு எண்ணிவிடலாம். பெரும்பாலும் கீழ்நிலை வீரர்களும் பொலிஸ துறையினருமே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆணையிட்டவர்கள் தண்டிக்கப்படுவதில்லை.

அதனால், சர்வதேச உதவியின்றி போர்க் குற்றம்போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை விசாரிப்பதற்கு இலங்கையால் முடியுமா என்ற சந்தேகம் இருப்பதாகவும் அவர் கூறினார். (எ-11)

## எதிர்க்கட்சித்...

என்று கோரி, அதன் 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தேசிய அரசாங்கத்தில் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்துள்ள நிலையில், மூன்றாவது பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கே எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது பற்றி இன்று சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவிக்கவுள்ளார்.

1977ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அ.அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சுதந்திரக்...

யும் தற்போதைய குருநாகல் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்ன உள்ளிட்ட கட்சியின் பிரபலங்கள் பலர இதில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்ற பின்னர் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் நிலையில் நடைபெறும் கட்சியின் முதலாவது கட்சி அங்கத்தவர்கள் சந்திப்புடன் கூடிய நிகழ்வு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அமைச்சர்கள்...

அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பாராளுமன்றின் அங்கீகாரம் அவசியமாகின்றது.

19-ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 30ற்கும் அதிகரிக்கக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், தேசிய அரசாங்கத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் அதற்கு பாராளுமன்றின் அனுமதி அவசியமானது என தெரிவிக்கப்படுகிறது. (ஏ-11)

## மோடி - சந்திரிகா...

பௌத்த மாநாட்டின் பக்க நிகழ்வாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை, தாய்லாந்து, மொங்கோலியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ள இந்த மாநாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்து கொள்ளவுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்த ஆண்டின ஆரம்பத்தில் விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் முனனாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த மாநாட்டில் முக்கியமாக தீவிரவாதம் குறித்து, குறிப்பாக மதத் தீவிரவாதம் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விவேகானந்தா அனைத்துலக நிறுவனம், ரோக்கியோ பவுண்டேசன் மற்றும சர்வதேச பௌத்த சமமேளனம் ஆகியன இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடுசெய்துள்ளன. (எ-11)

## மோ.சைக்கிள் - பஸ்...

வனுடன் மோட்டார சைக்கிளில் பாடசாலைக்குச் சென்றுள்ளார்கள்.

இந்த நேரம் ஓட்டங்குளம் சந்தியில் குறுகிய தூர சேவையில் தற்காலிகமாக ஈடுபடுத்தப்பட்ட பஸ்ஸுடன் இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குளளானதில் பின்பக்கமாக இருந்து சென்ற மாணவன் மயக்கமுற்ற நிலையில் மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணம் அடைந்துள்ளார்.

மற்றைய மாணவனான எஸ்... வன் (வயது 20) என்பவர் மயக்கமுற்ற நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)


### German Swiss Academy

கடந்த 10/08/2015 ஆம் திகதியில் "Goethe institut" ஆல் நடத்தப்பட்ட "Deutsch" (டொச்) **A1** பரீட்சையில் (அதாவது ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா மொழிகள்) திரு. R.மயூரன் ஆசிரியரிடம் கற்று இம்முறை ஒரே தடவையில் 10 மாணவர்களில் 9 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

(1630) தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்.

கண்டி வீதி, ஐயா கடை சந்தி, சாவகச்சேரி. | இல. 136 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, நெல்லியடி. **T.P 0776454998**

### FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH IN NORTH

### பிரெஞ்சு மொழி வகுப்பு

(C-2007)

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

No. 40, பலாலி வீதி, ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 12.09.15 சனி 8 மணிக்கு | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09 @ 4pm. | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 16.09 @ 4pm

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

### CSE COLOMBO STOCK EXCHANGE — பங்குச்சந்தை பற்றிய அடிப்படை அறிமுகம்

**பங்குச்சந்தையில் எவ்வாறு முதலீடு செய்யலாம்? என்பதை**

அறிந்து கொள்வதற்கு, நாளை (04.09.2015) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பங்குப்பரிவர்த்தனை- யாழ் கிளை கேட்போர்கூடத்தில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுங்கள். (1664)

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 0777822014 / 2221455
147-2/3, கே.கே.எஸ் வீதி (சத்திரச்சந்தி) யாழ்ப்பாணம்.

### O/L உடன் விரும்பிய எந்த நாட்டுக்கும் செல்ல

வெளிநாட்டு பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் வேலைவாய்ப்பு முகவர்கள் விசா சேவை வல்லுநர்கள்

ஒரே அரங்கில் பங்குபற்றும்

**MEGA International Education & Job FAIR**

September 15th
9am-5pm
@ Gnanams Hotel, Jaffna

வெளிநாட்டு கல்வி - தொழில் - விசா கண்காட்சியும், அனுமதிகளும்

பிரவேசம் இலவசம்

மேலதிக விபரங்களுக்கும், முற்பதிவுகளுக்கும் 077 36 16 798 / 0777 324 004 (C-2010)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.